Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நிலவு.com வெளியீடுகள்
இதயம் குளிரும் இணையம்
DREAM SOLUTIONS PVT LTD
The Solutions People
The King Of Multimedia
சுயகற்றலுக்கான தமிழில் பல்லூடக குறுவட்டுக்கள்

| | | |
|---|---|---|
| Ms-Word-xp | Pagemaker | Java |
| Ms-Excel-xp | PhotoShop | TCP/IP |
| PowerPoint-xp | CorelDraw | SQL |
| Ms-Access-xp | Macromedia Flash | Thirukkural |
| Ms-FrontPage-xp | Computer Hardware | Thamizha |
| Ms-Visual Basic | 3D-Studio Max. | இன்னும் பல... |

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 19 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 21 (03.01.2005) திங்கட்கிழமை இதழ்:95

# மீட்புப் பணி என்ற போர்வையில் வெளிநாட்டுப் படைகள் குவிப்பு!

## பாதுகாப்புச் சூழல் பாதிக்கலாம் என அச்சம்

(கொழும்பு)

சுனாமி கடற் கொந்தளிப்பால் இலங்கையில் ஏற்பட்ட பெரும் அழிவுகளை அடுத்து – மீட்புப் பணி என்ற பெயரில் இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கையில் இராணுவ ரீதியர்ன தலையீடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து மீட்பு மற்றும் உதவிப் பணிகளுக்காக இந்தியா தனது கடற்படையின் 5 போர்க் கப்பல்களை இலங்கைக்கு அனுப்பிவைத்தது. பின்னர் மேலதிகமாக இரண்டு கப்பல்களை இந்தியா இலங்கைக்கு அனுப்பியுள்ளது. இவை காலி, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் நிலைகொண்டு உதவி மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றன. சுமார் 1000 இந்தியப் படையினர் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு ஒப்ரேசன் றெயின் பே ஈஸ்ட் என்று பெயரிடப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கப் படையின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்!

## முன்னெடுக்கக் கோருகிறார் சிறிகாந்தா



(யாழ்ப்பாணம்)

அமெரிக்க வல்லரசின் படைகள் இலங்கைத் தீவில் நிலைகொள்வதை எதிர்த்து தென்னிலங்கையின் அரசியல் சக்திகளை உள்ளடக்கி பரந்துபட்ட எதிர்ப்பு இயக்கம் ஒன்றை இன்றைய இக்கட்டான நிலையிலும் முன்னெடுக்க வேண்டிய கடமையும் கட்டாயமும் இருப்பதாக ரெலோ முதல்வர் சிறிகாந்தா நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

உலகளாவிய ரீதியில் ஆக்கிரமிப்புச் சிறகுகளை விரித்திருக்கும் அமெரிக்க வல்லரசின் கடற்படைத் துருப்புக்களை - வரலாறு காணாத இயற்கை அழிவைச் சந்தித்திருக்கும் இலங்கைத் தீவின் மனித அவலங்களைப் பயன்படுத்தி, மனிதாபிமானப் பணி என்ற போர்வையில் இலங்கையின் கடற்பரப்பிலும் நிலப்பரப்பிலும் நிலைகொள்ள ஜனாதிபதி சந்திரிகா அழைத்திருப்பது தொலைதூர நோக்குடன் கூடிய கபடத்தனமான அரசியல் - இராஜதந்திர நடவடிக்கையே அன்றி வேறெதுவுமில்லை.

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மக்களுக்கான உதவிகளை அமெரிக்கா முழுமையாக வழங்கும்!

## இராஜாங்கச் செயலர் கொலின் பவல்

(வொஷிங்ரன்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு தேவைப்படுகின்ற அனைத்து மனிதாபிமான உதவிகளுக்கும் அமெரிக்கா பூரண ஒத்துழைப்பினை வழங்குமென அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

வொஷிங்ரனில் உள்ள அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகத்தின் அனு தாபப் புத்தகத்தில் ஒப்பமிட்ட பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவிததார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் - கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களது உடனடித் தேவைகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# நலன்புரி நிலையம் தீ வைத்து எரிப்பு!

(பருத்தித்துறை)

படையினரின் அச்சுறுத்தல் காரணமாக குடத்தனை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலுள்ள நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்கள் நேற்றுமுன்தினம் வெளியேறியதை அடுத்து மேற்படி நலன்புரி நிலையத்துக்கு இனம்தெரியாத கும்பல் ஒன்று தீயிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த இருவரை படையினர் தாக்கியதை அடுத்து சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துடன் தொடர்பு கொண்டபோது அவர் அங்கு வருகை தந்து தாக்கப்பட்ட நபர்களை விசாரித்து பின்னர் பாதுகாப்புக் காரணமாக மக்களை வேளாங்கன்னி மாதா கோவிலில் சென்று தங்குமாறு கேட்டுகொண்டதற்கு அமைய அங்கு மக்கள் தங்கினர்

இதனையடுத்து நேற்று அதிகாலை அங்கு வருகைதந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று மேற்படி நலன்புரிநிலையத்தைத் தீக்கிரையாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இதன் காரணமாக பாடசாலையின் 30 அடி கொட்டில் அழிந்ததுடன் சிறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தளபதி குடாநாட்டுக்கு விஜயம்!

(கொழும்பு)

பாதுகாப்பு நடவடிக்கைகளை மீளமைப்பது தொடர்பாக ஆராய்வதற்காக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட யாழ்.குடா நாட்டுக்கு விஜயம் செய்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்செய்த இராணுவத் தளபதி - சுனாமி கடற் கொந்தளிப்பால் அழிவடைந்த இராணுவ முகாமகள், காவல் நிலையங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

வடமராட்சிப் பகுதியிலும், வடமராட்சி கிழக்குப் பகுதியிலும், பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலும் சேதமுற்ற தளங்களைப் பார்வையிட்ட லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட, அழிவடைந்த தளங்களை மீளமைப்பது தொடர்பாக உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினார்.

சுனாமி கடற் கொந்தளிப்புக்குப் பின்னர் குடாநாட்டில் பாதுகாப்பு நிலைமையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் தொடர்பாகவும் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட, யாழ்.குடாநாட்டுக்கான இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் ஆராய்ந்ததாகவும் தெரியவருகிறது. (தே)

# சொல்ஹெய்ம் இந்த வாரம் கொழும்புக்கு வருகின்றார்!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்த வாரம் மீண்டும் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் தங்கியிருக்கும் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசவுள்ளதுடன், கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனையும் சந்தித்து அவர் பேச்சு நடத்துவார்.

இதன்போது சுனாமி கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட இழப்புக்களுக்காக நோர்வே அரசாங்கத்தின் அனுதாபத்தை சொல்ஹெய்ம் தெரிவிப்பார் என்றும் கூறப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சூழலில், புதிய பலத்துடன் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் எரிக் சொல்ஹெய்ம் அரச மற்றும் புலிகள் தரப்புடன் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.**

# பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பிற்காக அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சந்திப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் துயர்துடைப்பு விடயமாக கலந்துரையாடல் ஒன்று பின்வரும் திகதிகளில் வலயரீதியாகவும், கல்விக்கோட்ட ரீதியாகவும் நடைபெறவிருப்பதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார்.

| காலம் | | இடம் | கலந்துகொள்ள வேண்டப்படுவோர் |
|---|---|---|---|
| 03.01.2005 | பி.ப.2.00 | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபம் | தென்மராட்சி வலய அதிபர்கள் |
| 04.01.2005 | மு.ப.9.30 | யா/இந்து மகளிர் கல்லூரி மண்டபம் | கல்விக்கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 04.01.2005 | மு.ப.10.00 | யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம் | தென்மராட்சி கோட்ட அதிபர்கள் (கொடிகாமம் பகுதி) ஆசிரியர்கள். |
| 04.01.2005 | பி.ப.2.00 | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபம் | சாவகச்சேரி மேற்கு பிரதேசப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள். |
| 04.01.2005 | பி.ப.2.00 | யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபம் | கோப்பாய் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 05.01.2005 | மு.ப.10.00 | யா/இராமநாதன் மகளிர் கல்லூரி | வலிகாமம் கல்வி வலய அதிபர்கள் |
| 05.01.2005 | பி.ப.2.00 | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் | யாழ் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 06.01.2005 | மு.ப.10.00 | யா/நெல்லியடி ம.ம.வி மண்டபம் | அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | மு.ப.9.00 | யா/இராமநாதன் கல்லூரி மண்டபம் | உடுவில் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | மு.ப.11.00 | யா/மல்லாகம் மகாவித்தியாலய மண்டபம் | தெல்லிப்பளை கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | மதியம் 12.00 | யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம் | கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | பி.ப.1.00 | யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | சண்டிலிப்பாய் அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | பி.ப.3.00 | யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபம் | சங்கானை அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 08.01.2005 | மு.ப.10.00 | யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | அதிபர்கள், ஆசிரியர்கள். |

# யாழ்.வலயப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட யாழ். வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர், மாணவர் கல்வி சாரா ஊழியர்களினது தற்போதைய நிலைமைகளை அறிவதன் பொருட்டும், புனருத்தாரண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் பொருட்டும், யாழ் வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர், மாணவர், ஆசிரியரல்லாத ஊழியர்கள் அனைவரையும், இன்று காலை 9 மணிக்கு தத்தமது பாடசாலைகளுக்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப்.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்ப கல்லூரியின் புகுமுக, பழைய மாணவர்கள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளதனால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.


கையிருப்பைக் குறைக்கும் நோக்குடன்

மலிவு விற்பனை

05/= தொடக்கம் 50/= வரையில் புத்தகங்கள்

| அப்பியாசப் புத்தகங்கள் | விலை |
|---|---|
| 1 கட்டு | 4.75 |
| 2 கட்டு | 9.25 |
| 3 கட்டு | 13.75 |
| 4 கட்டு | 18.25 |
| 5 கட்டு | 22.50 |

றிச்சாட், அந்திவானப் பதிப்பகங்களின் அப்பியாசப் புத்தகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.2225542

(C/3500)


# யாழ்.வர்த்தகர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதனை ஒருமுகப்படுத்துவதற்கான ஓர் முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி வருவாய்த்துறை நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வரத்தக சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களும், இக்கைங்கரியங்களில் ஆர்வமுள்ள வரத்தகப் பெருமக்களும் தவறாது பங்கு பற்றும் வண்ணம் யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தக்கூட்டத்திற்குச் செல்வதற்கு யாழ்.வணிகர் கழகப் பணிமனையிலிருந்து வாகனம் புறப்படவுள்ளதால் யாழ்.கழகத்துடன் 222 2367 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், வடமராட்சியிலிருந்து புறப்படுவோர் 2263206 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறும் யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## நல்லூர் பிரதேச சபையினர் தண்ணீர் பவுசர் அனுப்பிவைப்பு

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு குடிநீர் வழங்கவென நல்லூர் பிரதேச சபையினர் தமது தண்ணீர் பவுசர் ஒன்றையும் கழிவுகளை அகற்ற இயந்திரம் ஒன்றையும் ஏழு சுத்திகரிப்புத் தொழிலாளர்களையும் அனுப்பிவைத்துள்ளனர். (63)

# வீதி விபத்தில் சிக்கி மூவர் படுகாயம்

தென்மராட்சியில் நேற்றுமாலை ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் நேரெதிரே மோதி விபத்துக்குள்ளானதில், அவற்றில் பயணம் செய்த மூவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோச் சாரதியான சங்கானையைச் சேர்ந்த குகதாஸ் (வயது 55), மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான மானிப்பாயைச் சேர்ந்த இராஜேஸ்வரன் சனேஸ்வரன் (வயது 21) மற்றும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நவரட்ணம் மனோஜ் (வயது 25) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றது. காயமடைந்த மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித் [இருவேடம்] பூஜா நடித்த அட்டகாசம் (ரீல்ஸ்)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

AIRFORCE I

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

விஜயகாந், லயா, சீதா, சரத்பாபு, ராதாரவி நடித்த கஜேந்திரா (ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

ANACONDA - 2 (ஆங்கிலப்படம்)

காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

விரைவில்: ஈழத் திருநாட்டின் தாவடியின் மைந்தன் ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, விஜயகுமார் நடித்த ராமகிருஷ்ணா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


# வேண்டுகோளும் நன்றி தெரிவிப்பும்

2004.12.26 ஆம் நாள் ஏற்பட்ட கடற் கோளினால் ஊறடைந்த மக்களுக்கு உடனேயே உதவிகளைச் செய்த வாணிபருக்கு எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள் உறவுகளையும், உடைமைகளையும் இழந்து ஏங்கி நிற்கும் எம் உறவுகளுக்குத் தொடர்ந்தும் உதவுமாறு அருளுள்ளம் கொண்ட வாணிபரனைவரையும் வேண்டுகிறோம்.

நீங்கள் வழங்கும் உதவிகள் பயனுள்ளவகையில், உரியவர்களைச் சென்றடைவதற்கான ஏற்பாடுகளை நிதித்துறை வணிக ஒன்றியம் செய்துள்ளது. எம்முடன் தொடர்புகொண்டு உங்கள் நன்கொடைகளை வழங்குமாறு வேண்டுகிறோம்.


தலைவர்,
நிதித்துறை வணிக ஒன்றியம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தொலைபேசி எண்: 0712 - 349565
021 - 2285706
தொலைநகல் எண்: 021 - 2285706
021 - 2285709


[C/3592]



# காணவில்லை

## சிவஜெயந்தன் அபிசேகன்

எனும் 8 வயதுச் சிறுவன் (முல்லைத்தீவு கோயில் குடியிருப்பைச் சேர்ந்தவர்.) வெள்ள அனர்த்தத்தின் பின் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 27.12.2004 அன்று மாலை பொது நலன்விரும்பி ஒருவரால் பராமரிப்பிற்காகவோ/ பொது மகன் ஒருவரால் துவறுதலாகவோ கூட்டிச்செல்லப்பட்டது தெரியவருகிறது. எனவே கூட்டிச்சென்றவர் குடும்பத்தை இழந்து தவிக்கும் அந்தக் குழந்தையின் பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டும், குழந்தையின் தகப்பனின் பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டும், உடன் ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். யாராவது தகவல் தெரிந்தால் உடன் எமக்குத் தெரியத்தரவும்.


Mr.S.சிவமோகன் (0777-237143)
அபிஷா தனியார் வைத்தியசாலை,
வவுனியா.

தகவல் தரவேண்டிய இடம் :-
அனைத்து காவல்துறை பணிமனைகள்.

Dr.S.சிவஜெயந்தன்
1 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
சி.சிவஜெயந்தன் - தகப்பன்

## கொழும்பிலிருந்து மாத்தறைக்கு புதிய ரயில் பாதை!

(கொழும்பு)

கொழுமபுக்கும் மாத்தறைக்கும் இடையில் புதிய ரயில் பாதையை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

தற்போதுள்ள கரையோரப் பாதைக்குப் பதிலாக நாட்டின் உட்புறமாக இந்தப் புதிய பாதை அமைக்கப்படும்.

கடற்கொந்தளிப்பால் கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையிலான ரயில் பாதைமிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது.

எனவே, இதற்கு நிரந்தரத் தீர்வாக புதிய ரயில் பாதை அமைக்கப்படும். தற்போது சேதமடைந்த ரயில் பாதையை திருத்தியமைக்கும் அதேவேளை, புதிய ரயில் பாதையை அமைப்பது தொடர்பாக பிரான்ஸ் கம்பனியொன்றுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# பாதுகாப்பான மீள் குடியமர்வுக்கு புலிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்!

## மட்டு.அம்பாறை தளபதி கேணல் பானு

(கொழும்பு)

**சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மக்களை பாதுகாப்பான முறையில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் எடுத்துவருவதாக மட்டக்களப்பு அம்பாறைமாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.**

**அம்பாறை - அக்கரைப்பற்று - சின்னமுகத்துவாரத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த கேணல் பானு மேலும் தெரிவிக்கையில்-**

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தம் மற்றும் கடந்த இரண்டொரு நாட்களாகப் பெய்துவரும் மழை என்பவற்றால், பல இடங்களில் பல பாலங்கள் உடைத்து பாதைகள் உருக்குலைந்துபோயுள்ளன.

போக்குவரத்து சீரற்று இருப்பதனால் சில இடங்கள் தனித்தனித் தீவுகளாக ஆக்கப்பட்டுள்ளன. அந்தத்தீவுகளுக்குரிய உணவு, தண்ணீர், மருந்து வகைகளைத் தொண்டர் நிறுவனங்கள், போராளிகள் காவிச்சென்று கொடுக்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் அமைப்பை பொறுத்தவரையில், கடல் அனர்த்தம் ஏற்பட்ட அன்றைய நாளிலிருந்து இன்று வரை மட்டு - அம்பாறை மாவட்ட அனைத்துப் பொறுப்பாளர்களும், போராளிகளும் வாகரையில் இருந்து பொத்துவில் வரை தொடர்ந்து பாதிக்கப்பட்ட கிராமங்களில் நேரடியாக நின்று உதவிப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறனர். மக்களின் துயரங்களைப் போக்கும் பணிகளில் அவர்கள் இரவு பகலாக நின்று உழைக்கிறனர்.

தற்போதைய பாதைகள் உடனடியாக சீரமைக்கப்பட வேண்டியுள்ளன. ஏனெனில், முக்கியமாக குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. கடற்கரைப் பிரதேசமாக இருப்பதால் இந்த இடங்கள் சுனாமி அனர்த்தத்தின் பின் குடிநீர் உப்புத்தண்ணீராக மாறிவிட்டது. தற்போது பெய்துவரும் மழையால், வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்வதால் சுகாதார சீர்கேடான நிலைமையுள்ளது.

எனவே, தற்போதைய நிலையில் இந்த மக்களை சுமார் நான்கு கிலோமீற்றர் தள்ளி, தற்காலிகமாகக் குடியமர்த்த வேண்டிய நிலைமை உள்ளது. இதுவரையில் இந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான திட்டமெதுவும் அரச தரப்பால் அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் 10 இடங்களில் தலா ஆயிரம் குடும்பங்களாகக் குடியமர்த்தி, அவர்களை குறிப்பிட்ட காலம் வரை பராமரிக்கும் ஏற்பாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுவருகிறது.

அத்துடன், பாதிக்கப்பட்ட மட்டு-அம்பாறை மக்களை நிரந்தரமாகக் குடியமர்த்தும் ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது என நம்புகிறேன். புவியியல் ரீதியாக பார்க்கும் போது சில குடியிருப்பு இடங்களை மாற்றி, வேறு இடங்களில் குடியமர்த்துவது பற்றியும் ஆலோசிக்க வேண்டியுள்ளது.

மட்டு - அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு பக்கம் கடலும், மறு பக்கம் வாவியுமாக மிகவும் ஒடுங்கிய தரைஅமைப்புக் காணப்படுகிறது. எனவே, இந்த இடத்தில் மீள் குடியமர்வு என்பது குறித்து நாம் யோசித்தே முடிவெடுக்கவேண்டியுள்ளது.

இதற்கான திட்டங்களை எமது அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

அண்மையில் சுனாமியால் ஏற்பட்டது பாரிய அனர்த்தம். மட்டு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் குடும்பங்கள் உள்ளன. இதில் கிட்டத்தட்ட 67 ஆயிரம் குடும்பங்கள் இந்த இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கடற்கரைப்பிரதேசத்தில் கூடியளவு வீடுகள் இடிந்து நொருங்கிக் காணப்படுகின்றன. இதனைப் புனரமைப்பதென்பது பாரிய வேலைத்திட்டம். இந்த வேலைத் திட்டத்தை மனித வலுவை மட்டும் வைத்துக்கொண்டு செய்ய முடியாது. நவீன உபகரணங்கள், டோசர், எக்சலேற்றர், றோலர் போன்ற கனரக வாகனங்களைப் பயன்படுத்தியே இப்பிரதேசங்களை புனரமைப்புச் செய்யமுடியும்.

சிலர் இங்குள்ள புனரமைப்பு நிவாரண பணிகளில் ஈடுபட சுதந்திரமில்லை எனத் தகவல் வெளியிட்டுவருகின்றனர். ஆனால் அது தவறான செய்தி. இது ஓர் இயற்கை அனர்த்தம் இந்தவகையில் எவரும் கட்டுப்பாட்டை விதித்திருப்பதாகத் தெரியவில்லை. படைத்தரப்பும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியது. நாமும் படைத்தரப்புக்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இருந்தும் சில இடங்களில் சில பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக மக்கள் இந்த அனர்த்தம் நிகழ்ந்த இடங்களுக்கு உணவுப் பொருட்களை கொண்டுவருவதில் படைத்தரப்பால் சில இடையூறுகள் இருக்கத்தான் செய்கின்றன்.

இந்த உணவு வண்டிகளை மட்டு.மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்து எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளால் கொண்டுவந்து, மீண்டும் ராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டுவரும் உணவு வண்டிகளை மறித்து தாமதப்படுத்தி சோதனையிடுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளது. இந்த இடர்பாடுகள் தொடர்பாக மட்டு - அம்பாறை அரசியற் பொறுப்பாளர் கௌசல்யன் - இராணுவ அதிகாரிகள், அரச அதிபர் ஆகியோருடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார் எனத் தெரிவித்தார்.

## உதவிப் பொருள் வாகனங்கள் பொலிஸில் பதியப்படவேண்டும்!

### புதிய நடைமுறை அறிவிப்பு

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் நிவாரணப் பொருட்களை வாகனங்களில் எடுத்துச்செல்லும்போது, அந்த வாகனங்களின் இலக்கங்கள், கொண்டுசெல்லப்படும் பொருட்களின் விபரம், அவை எந்தப் பகுதிகளில் வழங்கப்படவுள்ளன போன்ற விபரங்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்படவேண்டுமென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதன்படி 2433671, 2421111 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது 2440438 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ அல்லது 0773166252 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கோ அறிவிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக பெருமளவானோர் உதவி வழங்குகின்றோம் என்ற போர்வையில் சென்று, அப்பகுதிகளில் நடைபெறும் செயற்பாடுகளுக்குத் தடையாகவும், இடையூறுகளையும் விளைவித்து வருகின்றனர். எனவே, இவ்வாறான பயணங்களை மேற்கொள்பவர்கள் அதனைத் தவிர்க்கவேண்டும்.

அத்துடன், வாகனங்களில் அதிகளவானோர் சென்று சிறிய உதவிகளை வழங்கிவருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

எனவே, பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பினை சகலரும் வழங்கவேண்டுமென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரசபையின் பணிப்பாளர் றியன்சி பெரேரா தெரிவித்தார். (தே)

## மொத்த சொத்தழிவு 40 ஆயிரம் கோடி ரூபா!

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட சொத்தழிவு 40 ஆயிரம் கோடியைத் தாண்டுமென திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெருந்தெருக்கள் அமைப்பதற்கும், ரயில் பாதை அமைத்தல், தொடர்பாடல், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற சேவைகளுடன் தொடர்புடைய சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்வதற்குக் குறைந்தது 6 மாதம் வரையாவது செல்லும்.

கடற்தொழில் 90 வீதத்திற்கு மேல் அழிந்துள்ளது. ஹொட்டல், கைத்தொழில் 30 வீதம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## ரயில்வே திணைக்களத்துக்கு 1000 கோடி ரூபா இழப்பாம்!

கடற்கொந்தளிப்பால் ரயில்வே திணைக்களத்தின் சொத்துக்களுக்கு ஆயிரம் கோடி ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே ஊழியர் உரிமைகள் மற்றும் ரயில்வே சொத்துக்களைப் பாதுகாக்கும் அமைப்பு கூறியுள்ளது.

ஹிக்கடுவ பிரதேசத்தில் கவிழ்ந்துபோன ரயில் எஞ்சினில் உப்புப் படிந்துள்ளது. இதனால் அது போக்குவரத்துக்கு பாவிக்கமுடியாத நிலையிலுள்ளதாக் பொறியியலாளர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

உப்புப்படிந்த அந்த எஞ்சினின் பெறுமதி 100 கோடி ரூபா. இதனைத் தவிர ஒரு பெட்டி 400 இலட்சம் பெறுமதியானது. இங்கு எட்டுப் பெட்டிகள் முழுமையாகவே சேதமடைந்துள்ளன. கரையோரத்தில் 40 கிலோமீற்றர் பாதையும், பாலகங்களும் முற்றாக அழிந்து போயுள்ளன.

ரயில் பாதையில் ஒரு கிலோ மீற்றரை அமைப்பதற்கு 35 லட்சம் செலவாகும். இவற்றைவிட சாரதிகள், உதவியாளர்கள் உட்பட ரயில்வே ஊழியர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் காணாமற்போன ஊழியர்கள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

உயிரிழந்த ரயில்வே ஊழியர்களை விட, ரயிலில் பயணம்செய்த வேளை உயிரிழந்த பயணிகளுக்கும் நட்டஈடு செலுத்தவேண்டும். எனவே, இவற்றையெல்லாம் பாக்குமிடத்து ரயில்வே திணைக்களத்துக்கு ஏற்பட்ட இழப்பு 1000 கோடிக்கு மேல் வருமென அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (தே)

## சுனாமி கடற்கொந்தளிப்பால் கல்விச் சமூகத்துக்குப் பேரிழப்பு!

கடற்கொந்தளிப்பின் பாதிப்பால கல்விச் சமூகத்துக்கு மிகப்பெரிய அழிவு ஏற்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை கிடைத்த விபரங்களுக்கமைய - பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் என 1500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து அல்லது காணாமற்போயுள்ளதாகக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் மட்டும் அதிபர் ஒருவர் உட்பட 10 ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளதாகவும், மற்றைய இடங்களில் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தால் 70 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இதில் 20 பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. எனவே, இதுபோன்ற அழிவுகள் குறித்து முழுமையான தகவல்களைத் திரட்டுவதற்காக விசேட குழுக்கள் பலவற்றை ஏற்படுத்துவதற்குக் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தீர்மானித்துள்ளார்.

அத்துடன். இந்த அனர்த்தத்தில் சிக்கி உயிர்தப்பிய மாணவர்களது நிலையை மேம்படுத்துவற்கு விசேட செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, இந்த அனர்த்தத்தில் சிக்கி 21 பல்கலைக்கழக மாணவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 39 பேர் காணாமற்போயுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் - கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் 14 பேரும் உயிரிழந்துள்ளதாகவும், 13 பேரைக் காணவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 9 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஐவர் மருத்துவ பீடத்தையும் ஒருவர் கலைப்பீடத்தையும், மற்றொருவர் விஞ்ஞான பீடத்தையும், இன்னொருவர் பொறியியல் பீடத்தையும் சேர்ந்தவர்களாவர். மேலுமொருவர் இந்த ஆண்டு மருத்துவ பீடத்துக்குத் தெரிவானவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 8 பேரும், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மூவரும், மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 31 பேர், களனிப் பல்கலைக்கழகத்தில் நால்வர், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நால்வரும் என மொத்தம் 39 மாணவர்கள் காணாமற்போயுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் துணைவேந்தர்கள் மூலமாக இந்தத் தகவல்கள் பெறப்பட்டதாக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (தே)

## பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வெளிநாட்டு இராஜ தந்திரிகள்!


### கூட்டமைப்பினர் அழைத்துவர ஏற்பாடு

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு - வெளிநாட்டுத் தூதுவர்கள், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்துவரும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சர்வதேச சமூகப்பிரதிநிதிகளை அழைத்துவந்து, அழிவுகளை காண்பிக்கவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பில் வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகளை சந்தித்து, இங்கு ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாக விளக்கமளிக்கவும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

# அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் பாகிஸ்தான் அணி 292 ஓட்டங்கள்!



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 9 விக்கெட் இழப்புக்கு 292 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்று சிட்னியில் ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சல்மான் பட் மற்றும் யாசிர் ஹமீட் ஆகியோர் இணைந்து அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்ரேலிய அணி பெரும்பாடுபடநேரிட்டது. அணியின் ஸ்கோர் 102 ஆக இருந்தபோதுதான் அவுஸ்ரேலிய அணி முதல் விக்கெட்டை வீழ்த்தியது.

99 பந்துகளில் 6 பவுண்டரிகள், 1 சிக்ஸரு டன் 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யாசிர் ஹமீட் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை ஷேன் வோன் கைப்பற்றினார்.


இதன்பின்னர் யுனுஸ்கான் களம் இறங்கி பாகிஸ்தான் அணியின் ஸ்கோரை கணிசமாக உயர்த்தினார். ஸ்கோர் 193 ஆக இருந்த போதுதான் இரண்டாவது விக்கெட்டை வீழ்த்த முடிந்தது.

மக்கில்லின் பந்துவீச்சில் யுனுஸ்கான் 46 ஓட்டங்களுடன் மக்ராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக யுகானா 8 ஓட்டங்களுடன் மக்கில்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதை யடுத்து சல்மான்பட் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 241 ஆக இருந்தது.


சல்மான் பட் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி 184 பந்துகளில் 16 பவுண்டரி களுடன் 108 ஓட்டங்களைக் குவித்தமை குறிப் பிடத்தக்கது. இவரது விக்கெட்டை மக்ரா கைப்பற்றினார்.

அடுத்து அப்ரிடி களம் இறங்கியபோதும் எதிர்முனையில் நின்றிருந்த அசிம் கமால் 10 ஓட்டங்களுடன் மக்கில்லின் பந்துவீச்சில்



ஆட்டமிழக்கநேரிட்டது.

இதையடுத்து நின்று நிதானித்து ஆடமுற்பட்ட பாகிஸ்தான் அணிக்கு - ஸ்கோர்



261 ஆக உயர்ந்தபோது அடுத்தடுத்து இடி விழுந்தது.

அப்ரிடி 12 ஓட்டங்களுடனும் நவீட் உல்-ஹசன் மற்றும் சொகைப் அக்தர் ஆகியோர் எந்த ஓட்டத்தையும் பெறாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தானின் ஸ்கோர் 280 ஐத் தொட்ட போது டனேஷ் கனேரியாவும் 3 ஓட்டங்க ளுடன் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

82 ஓவர்கள் நிறைவில் முதல்நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது - பாகிஸ்தான் அணி 9 விக்கெட் இழப்புக்கு 292 ஓட்டங் களைப் பெற்றிருந்தது.

கம்ரன் அக்மல் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களுடனும், மொகமட் ஆசிவ் ஓட்டம் எதையும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

அவுஸ்ரேலிய அணி சார்பில் பந்துவீசிய மக்கில் 22 ஓவர்களில் 87 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், மக்ரா 14 ஓவர்களில் 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஷேன் வோன் 24 ஓவர்களில் 84 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## சுனாமி நிவாரணத்துக்காக டெஸ்ட் போட்டி வருமானத்தை தென்னாபிரிக்கா வழங்கும்!

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னா பிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. டேர்பனில் நடந்த 2 ஆவது டெஸ்ட் சமநிலையில் முடி வுற்றது. இந்த டெஸ்டில் தோல்வியில் இருந்து தென்னாபிரிக்கா மயிரிழையில் தப்பியது.

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் இடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நேற்றுத் தொடங்கியது.

இந்தப் போட்டியில் இருந்து கிடைக்கும் வருமானத்தைச் சுனாமி நிவாரணத்துக்கு வழங்கப் போவதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. ஏற்கனவே இங்கிலாந்து சுனாமி நிவாரணத்துக்கு ரூபா 15 லட்சம் வழங்குவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்தியத் தீவுகள் அணி அவுஸ்ரேலியா சென்றது!



மூன்று நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்ப தற்காக மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று அவுஸ்ரேலியா சென்றடைந்தது.

தற்போது பாகிஸ்தான் அணியுடன் அவுஸ் ரேலிய அணி இறுதி டெஸ்ட் போட்டியில் ஆடிவருகிறது. நேற்று ஆரம்பமான இந்த டெஸ்ட் முடிவடைந்ததும் மூன்று நாடுகள் பங் கேற்கும் ஒருநாள் போட்டிகள் தொடங்கும்.

இதில் அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் மூன்றாவது நாடாக மேற்கிந் தியத் தீவுகள் அணி விளையாடும். இந்தத் தொடரில் பங்கேற்பதற்காகவே பிறைன் லாறா தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று மெல்பேர்ன் சென்றடைந்தது.

## பங்களாதேஷ் - சிம்பாப்வே போட்டிகள் நடைபெறுமா?

### நில அதிர்வால் சந்தேகம்

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட திடீர் நில அதிர்வால் சிம்பாப்வேக்கு எதிரான கிரிக்கெட் தொடர் நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சிம்பாப்வே அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வரும் 6 ஆம் திகதி சிட்டகொங்கில் தொடங்கவுள்ளது. இதற் கிடையே பங்களாதேஷ் துறைமுக நகரான சிட்டகொங்கில் நேற்றுமுன்தினம் சிறிய நில அதிர்வு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடர் நடக்குமா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. முதல் டெஸ்ட் நடக்க இன்னும் 2 நாட்களே உள்ளன. பங்களாதேஷைப் பொறுத்தவரை சிட்டகொங் தவிர குறிப்பி டும்படியான மைதானம் டாக்காவில் மட்டுமே உள்ளது. இங்கு ஏற்கனவே 2 ஆவது டெஸ்ட் மற்றும் 1, 4, 5 ஆவது ஒருநாள் போட்டிகள் நடக்கவுள்ளன.

இந்த நிலையில் அனைத்துப் போட்டி களையும் டாக்கா - பங்கபந்து தேசிய மைதானத்தில் மட்டுமே நடத்தவேண்டிய சூழ் நிலை ஏற்படும். சிம்பாப்வே அணி சமீபகால மாக ஏகப்பட்ட பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது.

திடீர் நிலஅதிர்வு குறித்து இந்த அணி என்ன முடிவெடுக்கப்போகிறது என்பதை பங்க ளாதேஷ் கூர்ந்து கவனித்து வருகிறது. அதே நேரத்தில் ஒரு டெஸ்ட் வெற்றிக்காக ஏங்கும் பங்களாதேஷ் இந்தத் தொடர் ரத்தானால், பெரிய அளவில் பாதிப்பைச் சந்திக்கும் என்ப திலும் எந்த சந்தேகமும் இல்லை.

போட்டிக்கான அட்டவணை -

திகதி - போட்டி இடம்
ஜன.6 முதல் டெஸ்ட் - சிட்டகொங்.
ஜன.14 2 ஆவது டெஸ்ட் டாக்கா.
ஜன.20 முதல் ஒருநாள் டாக்கா.
ஜன.24 2 ஆவது ஒருநாள் சிட்டகொங்.
ஜன.26 3 ஆவது ஒருநாள் சிட்டகொங்.
ஜன.29 4 ஆவது ஒருநாள் டாக்கா.
ஜன.31 5 ஆவது ஒருநாள் டாக்கா.

## சென்னை ஓபன் ரெனிஸ் இன்று ஆரம்பமாகிறது!



(சென்னை)

சென்னை ஓபன் ரெனிஸ் போட்டி இன்று தொடங் குகிறது. மோயா, ஸ்ரீசேப்பன் போன்ற முன்னணி வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

சென்னையில் ஆண்டுதோறும் ஏ.ரி.பி. ரெனிஸ் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. 1997 ஆம் ஆண்டு முதன்முதலில் நடந்தது. 2001 ஆம் ஆண்டுவரை இந்தப் போட்டியை ஐ.டி.சி. நிறுவனம் நடத்தியதால் 'கோல்ட் பிளேக் ஓபன்' என்று அழைக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டுவரை டாடா நிறுவனம் நடத்தியதால் 'டாடா ஓபன்' என்று அழைக்கப்பட்டது. இந்த ஆண்டு 'சென்னை ஓபன்' என்று அழைக்கப்படவுள்ளது.

சென்னை ஓபன் ரெனிஸ் போட்டி நுங்கம் பாக்கத்தில் இன்று தொடங்குகிறது. 9 ஆம் திகதிவரை இந்தப்போட்டி நடக்கும்.

கார்லோஸ் மோயா (ஸ்பெயின்), ஸ்ரீசேப்பன் (தாய்லாந்து) ஜோனஸ் பிஜோர்க்மன் (சுவீடன்) ரெய்னர் ஷட்லர் (ஜேர்மனி) கம்பில் (அமெரிக்கா) போன்ற முன்னணி வீரர்கள் உட்பட 32 பேர் பங்கேற்கவுள்ளனர்.

# விளையாட்டு

## சுனாமி நிவாரண நிதிக்காக

# ஆசிய லெவன் - ஐ.சி.சி. லெவன் ஒருநாள் போட்டி 10ஆம் திகதி!

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரண நிதி திரட்டுவதற்காக ஆசிய லெவன் - ஐ.சி.சி. லெவன் அணிகளுக் கிடையில் இரண்டு ஒருநாள் கிரிக்கெட் போட் டிகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் நிதி திரட்ட கிரிக்கெட் வட்டாரத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி 2 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்தி, அதன்மூலம் கிடைக் கும் தொகையை நிவாரண நிதியாக வழங்க வுள்ளது.

இதில் ஆசிய லெவன் அணி என்றும் மற் றொன்று ஐ.சி.சி.லெவன் அணி என்றும் இரண்டு அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் ஒரு அணியாகவும், அவுஸ் ரேலியா உட்பட மற்ற அணிகளைச் சேர்ந்த வீரர்கள் மற்றொரு அணியாகவும் பிரிக்கப் பட்டுள்ளனர்.

ஆசிய லெவன் அணியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களாதே ஷைச் சேர்ந்த வீரர்கள் இடம்பெறுவார் கள். ஐ.சி.சி. லெவனில் அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூஸி லாந்து, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற அணி யைச் சேர்ந்தவர்கள் இடம்பெறவுள்ளனர். நட்சத்திர வீரர்களான டெண்டுல்கர், லாரா போன்றோர் இந்தப் போட்டியில் ஆட சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஆசிய லெவன் - ஐ.சி.சி. லெவன இடையே யான முதலாவது ஒருநாள் போட்டி அவுஸ் ரேலியாவில் உள்ள மெல்பேர்ன் நகரில் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2 ஆவது ஆட்டம் நடைபெறும் திகதி மற்றும் இடம் குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இப்போது ஆசிய லெவனில் இடம்பெறும் வீரர்களின் பெயர்ப் பட்டியலை ஆசிய கிரிக்கெட் சபை விரைவில் வெளியிடவுள்ளது.

ஐ.சி.சி.லெவனில் விளையாடும் வீரர்கள் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்யவுள்ளது. இந்தப் போட்டியின் ஒளி பரப்பு உரிமையை அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பிரபல 'சனல் 9' பெற்றுள்ளது. அனைத்து நாட்டவரும் பார்க்கும் விதத்தில் இந்தப் போட்டியை ஒளிபரப்பப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.


இந்தப் போட்டி குறித்து சர்வதேச கிரிக் கெட் சபைத் தலைவர் ஈசான்மானி கூறியதா வது -

கடற்கொந்தளிப்பால் சர்வதேச அளவில் கிரிக்கெட் வீரர்கள் மட்டுமல்லாமல் மற்றவர் களும், பாதிப்படைந்துள்ளனர். பாதிக்கப் பட்டவர்களுக்கு எங்களால் எந்த அளவுக்கு உதவமுடியுமோ அந்த அளவுக்கு உதவு வோம். ஆசிய லெவன் - ஐ.சி.சி. லெவன் இடையேயான இந்தப் போட்டியை நடத்து வதன் மூலம் பலகோடி ரூபாய் திரட்டமுடியும் என்ற நம்பிக்கை உள்ளதென அவர் தெரி வித்தார்.

## உண்மைக்குப் புறம்பான செய்திகளால்

# தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஜனாதிபதி மழுங்கடிக்க முயல்கின்றார்!

## மாவை எம்.பி. கண்டித்து அறிக்கை



(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரலையால் ஏற்பட்ட, மனிதப் பேரிழப்புக்கள், சொத்திழப்புக்கள், என்பவற்றால் அனாதரவாக்கப்பட்ட மக்களுக்கும், மனிதாபிமான உதவிகளை வழங்கும் சர்வதேசத்திற்கும் இந்தத் துயர சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வழமை போலவே ஜனாதிபதி உண்மைக்குப் புறம்பான வகையில் கடற்புலிகளுக்குப் பேரிழப்பென்று கூறியுள்ளார். இதனையே சில தென்னிலங்கை பேரினவாத செய்தியாளர்களும், சில இந்தியப் பத்திரிகைகளும் கூட செய்தியாக வெளியிட்டிருக்கின்றன.

எனவே இவ்வாறான உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவதன்மூலம் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் அதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும், மூடி மறைத்துவிடவும் - மனிதாபிமான, மனிதத்துவ உணர்வுகளுடன் செயற்படவேண்டிய சந்தர்ப்பத்தில் யுத்த மதிப்பீடு செய்வது மற்றும் ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலின்படி தென்னிலங்கை அரச மையத்தை வலுப்படுத்தும் வகையில் செயற்படுவதை வன்மையாக கண்டிப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

அரசியல் ஆதாயம் தேடும் இவ்வாறான முயற்சிகள்மீது பொதுமக்களும், சர்வதேசமும் எச்சரிக்கையுடன் அவதானிக்கவேண்டும்.

நீண்டகாலப் போரினாலும், வெள்ளத்தினாலும் அனர்த்தங்களுக்குள்ளாகியுள்ள மக்களுக்குக் குறிப்பாக வடக்கு - கிழக்குத் தமிழ்தேச மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச நாடுகள் 4.5 பில்லியன் (ரூ 45000 கோடி) நிதி உதவமுன்வந்தபோது, தமிழ்த்தேசத்தில் இடைக்கால நிர்வாக அதிகாரக் கட்டமைப்பை உருவாக்கவேண்டிய அவசியத்தைச் சர்வதேச நாடுகளின் கருத்துக்களின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் அதற்கான பிரேரணையை முன்வைத்தனர்.

அதனை நிறைவேற்றவிடாமல் தடுத்து நிறுத்திய ஜனாதிபதியும் பேரினவாத சக்திகளும் இன்று தமிழ்மக்களின் போர்ப்பலத்தைக் குறைத்து மதிப்பிட்டுச் செய்திகளை வழங்கும் நோக்கமென்ன?

அத்தகையதொரு இடைக்காலத் தன்னாட்சிக் கட்டமைப்பு இருந்திருக்குமானால் 'சுனாமி' பேரலை அனர்த்தங்களின்போது மனிதாபிமான உதவிகளை நேரடியாகத் தமிழ்தேசம் பெற்றுக்கொள்ளவும், மீட்பு நடவடிக்கைகளையும், உதவிகளையும் உடனுக்குடன் வழங்குவதற்கும் பெரும் உதவியாக இருந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே ஜனாதிபதியும் அரசும் இராணுவ மதிப்பீடு செய்து சர்வதேசத்தையும், பொதுமக்களையும் திசை திருப்பி மனிதாபிமானத்திலும் பேரினவாத அரசியல் ஆதாயத்தை நோக்காமல், காலத்தை வீணடிக்காமல் போரினாலும், 'சுனாமி' பேரழிவாலும் அனர்த்தப்பட்டுள்ள தமிழ்த்தேச மக்களுக்கு சர்வதேச உதவிகளையும், நிவாரண நடவடிக்கைகளையும், தமிழ்த்தேச மக்களின் உடனடி செயலணிக் கூட்டமைப்புக்களின் மூலம் நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியை வற்புறுத்துகிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ்த்தேசத்தில் தன்னாட்சி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதையும் அந்தக் கட்டமைப்புக்கூடாக தமிழ்த்தேசத்தை மீளக் கட்டியெழுப்பச் சர்வதேசம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் கோரி நிற்கின்றோம்.

என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பங்கீட்டு அட்டைக்கு மா விநியோகம்

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லைப் பரப்புக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம்முதல் உலர் உணவு அட்டைகளுக்கு மா விநியோகிக்கப்படுகிறது.

இதேவேளை போதியளவு எரிபொருட்கள் இருப்பதனால் தட்டுப்பாடின்றி எரிபொருட்களைப் பெற முடியும் எனவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (29)

## மருந்துப் பொருட்கள் கையளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு சந்நிதியான் ஆச்சிரமம் ஒரு தொகுதி மருந்துப் பொருட்களை கடந்தவாரம் வழங்கியுள்ளது.

கடற்கொந்தளிப்பால் காயமடைந்து வைத்தியசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென்றே இந்த மருத்துப் பொருட்கள் வழங்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரமத்தின் பிரதிநிதிகள் - மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளையிடம் இவற்றைக் கையளித்தனர்.

## குடிநீர் கிணறுகள் உவர் நீராகின்றன

(நவிண்டில்)

வடமராட்சியில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பையடுத்து, கரையோரப் பகுதிகளில் உள்ள 500 இற்கும் மேற்பட்ட குடிநீர்க் கிணறுகள் உவர் நீராக மாறியுள்ளன.

குறிப்பாக தொண்டமனாறு முதல வெற்றிலைக்கேணி வரையிலான பகுதிகளில் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. அதன்போது குடிநீர்க் கிணறுகளுக்குள் கடல்நீர் சென்றதனால் குடிநீர் - உவர்நீராக மாறியுள்ளது. இதனால் இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேறும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது, குடிநீர்த் தட்டுப்பாட்டுக்கு முகம்கொடுக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

## பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சையளிக்க கொரிய மருத்துவக் குழுவும் வருகை

யாழ்.குடாநாட்டில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வளவுக்கு சிகிச்சை அளிக்கமுடியுமோ, அவ்வளவுக்கு நாம் எமது சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்வோமென - கொரிய நாட்டு அவசர சிகிச்சைப் பிரிவுப பணிப்பாளர் டொக்டர் யோன் யுன் க்வான் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சையளிக்கும் பொருட்டு இவர் தலைமையில் கொரிய மருத்துவர் குழு ஒன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் பலாலி விமானநிலையத்தை வந்தடைந்தது. அங்கிருந்த நேரடியாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு இந்தக் குழுவினர் விஜயம்மேற் கொண்டனர். அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவுகளையிட்டு நாம் மிகவும் கவலைப்படுகிறோம். ஏனைய பல நாடுகள் இங்கே வந்து நிவாரண உதவிகளை வழங்கத் தயங்குகின்றன. ஏனெனில் மற்றைய நாடுகளின் அபிப்பிராயம் தமிழ்ப் பிரதேசங்களில் அரசியல் நிலை மிகவும் நெருக்கடியாக உள்ளது என்பதேயாகும்.

என்னையும், என்னுடைய குழுவினரையும் இங்கு வரவழைக்க தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் யோகராஜன் மேற்கொண்ட முயற்சியைப் பாராட்டுகிறேன். இதனாலேயே இங்கே சுனாமி அலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க நாம் இங்கே வந்திருக்கிறோம்.

ஆகவே, நாம் இங்கே தமிழ்ப் பிரதேசங்களில் உங்களுடைய ஒத்துழைப்புடன் நோயாளர்களுக்கு வேண்டிய மருத்துகளைக்கொடுத்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவுக்கு செய்வோம் என்று தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்டோருக்கு ஒருங்கிணைந்த சேவை வழங்க விசேட செயலணிக்குழு அமைப்பு

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருங்கிணைந்த சேவையை வழங்குவதற்கென விசேட செயலணிக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட இந்தச் செயலணிக்குழுவில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வடமராட்சியில் அமைந்துள்ள கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென அமைக்கப்பட்டிருந்த விசேட கருமபீடத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே இந்தச் செயலணி அமைக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒருங்கிணைந்த சேவைகளை வழங்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட இந்த விசேட செயலணியின் இணைப்பாளர்கள், ஆலோசகர்கள், திட்டமிடல் குழு, கண்காணிப்புக்குழு, நீர் விநியோகம், நிதி ஆகியன தனித்தனி அலகுகளாகப் பிரிக்கப்பட்டு யாழ். மாவட்டத் திணைக்களங்களின் அதிகாரிகள் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் இணைப்பாளர்களாக ஊற்று நிறுவனத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம, அரசியல்துறையைச் சேர்ந்த பாலையா ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இந்தச் செயலணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கல்வித் திணைக்கள அதிகாரிகள், கரவெட்டி பிரதேச செயலர் சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் வசந்தகுமார், சாவகச்சேரி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், மருதங்கேணி பிரதேச செயலர், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கடற்தொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகள், கமநல திணைக்கள அதிகாரிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், தேசிய நீர்வழங்கல் அதிகாரசபை, மின்சாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீடமைப்பு அதிகாரசபை, மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : கு.ஆதித்தன்
முகவரி : கோண்டாவில்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


## மீட்புப் பணியில் ஈடுபடுவோருக்கு சுகாதாரத் துறையினர் அறிவித்தல்

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்கள் தொற்றுநோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர்.

கடற்கொந்தளிப்பால் பாதிப்பட்ட பகுதிகளில் மீட்பு பணியில் நிற்கும் போராளிகள், தொண்டர்கள் ஆகியோர் சுகாதார சேவையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக தமிழீழ சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையில்-

இறந்த உடல்கள் காரணமாக சூழல் பெருமளவில் மாசடைந்துள்ளதால் தொற்றுநோய்க் கிருமிகள் பரவ வாய்ப்புள்ளது. எனவே அந்தப் பகுதிகளில் இருக்கும் கிணறுகளில் உள்ளநீரை உணவுப் பொருட்களை பாவனைக்கு உறுதிப்படுத்தும்வரை பாவிக்க வேண்டாம்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் செல்வோர் பாதணிகள் அணிந்து செல்லவேண்டும். பாதுகாப்பான குடிநீரை எடுத்துச்செல்ல வேண்டும். மீட்புப் பணியாளர்கள் கையுறைகளைப் பயன்படுத்த வேண்டும். நோய்க்கிருமிகள் தாக்காத வண்ணம் முகமூடிகளை அணிந்திருக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. (01)

## சின்னஞ்சிறு செய்திகள்

### தமிழர் ஆசிரியர் சங்கமும் நிவாரண உதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாகப் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கியுள்ளதாகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மககளின் புனர்வாழ்வுக்காக விசேட நிதி சேகரிப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்குச் சங்கம் தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### கோவிலாக்கண்டியில் பஸ்தரிப்பு நிலையம்

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்துக்கு அருகில் 50 ஆயிரம் ரூபா செலவில் பஸ்தரிப்பு நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த அமரர் சரவணமுத்து சிவானந்தம் நினைவாக இந்த பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, வடபிராந்திய போக்குவரத்து சாலை செயலாற்று உதவியாளர் எஸ். சிறிகாந்தனால் திறந்துவைக்கப்பட்டது. (29)

### வலி. கிழக்கு பிரதேச செயலகமும் நிவாரண உதவி

(கோப்பாய்)

வலி. கிழக்கு பிரதேச செயலகத்தால், இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுமுகமாக உணவுப் பொதிகள், அத்தியாவசியப் பொருட்கள் வலி.கிழக்கு பிரதேச மக்களிடம் இருந்து சேகரித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகளின் வரிசையில் கடந்த நாட்களில் கரவெட்டி கிராம சேவையாளர் பிரிவுக்கு 1040 மதிய உணவுப் பொதிகளும், மருதங்கேணிப் பிரதேச மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (90)

### ஆயுர்வேத வைத்தியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

நலலூர் பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியசாலை கோண்டாவில் உப அலுவலகத்துக்கு ஆயுர்வேத வைத்தியராக புண்ணியமூர்த்தி சிறிகணேசன் கடந்தவாரம் பொறுப்பேற்றுள்ளார் என்று நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (63)




# காற்றும் அவளும்

சிறுகதை

நெல்லை ஆனந்தி



மழை 'சோ' என்று பொழிந்து கொண்டிருந்தது. சாருஜா அவசர அவசரமாக அலுவலகத்துக்குப் புறப்படத் தயாரானாள். பலத்த காற்றும் வேறு வீசிக் கொண்டிருந்தது. சூறாவளி வரும் சாத்தியக்கூறு இருக்கிறது. அதற்கு மக்களை ஆயத்தம் செய்யுமாறு தொலைக்காட்சியிலும், வானொலியிலும் அறிவித்தல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

''அம்மா ஸ்கூலுக்கு நேரமாகிறது. நான் போகப்போறன்''

என காருண்யா புறப்படத் தயாரானாள். காருண்யா பத்து வயதுச் சிறுமி. அவளைப் பாடசாலைக்கு அனுப்புவதா, வேண்டாமா என்று குழம்பியவண்ணம், வானத்தை எட்டிப்பார்த்தாள் சாருஜா. இருள் கோலங்கள் மேகக்கூட்டங்களைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

''மழை இப்போதைக்கு விடமாட்டுது அம்மா'' காருண்யாவின் அவசரம் அவளின் கூற்றில் வெளிப்பட்டது.

இப்பொழுது அதனுடைய காலம். அது தன்னுடைய குணத்தைக் காட்டாமல் விட்டுவிடுமா? என்ன''

சாருஜா முடிவு எடுக்க முடியாமல் மீண்டும் வானத்தை எட்டிப்பார்க்க...

''அம்மா நீங்கள் வானத்தை, வானத்தைப் பார்த்தது போதும். எனக்கு இண்டைக்குக் கணிப்பீடு இருக்குது. போகாட்டால் பிறகு எங்கடை ரீச்சர் வைக்க மாட்டா.''

காருண்யா சிணுங்கவும்

''பொல்லாத கணிப்பீடு. இந்த அடைமழையுக்கை உங்கடை ரீச்சரே வாறாவோ தெரியவில்லை. நீ என்னடா எண்டால்''

நீங்களும் இந்த அடை மழையுக்கை அலுவலகத்துக்குப் போகப் போறியள் தானே. அதுபோல அவவும் வருவா. நான் போகப்போறன் என்று அடம் பிடித்தாள் காருண்யா. காருண்யாவை ஸ்கூலால் மறித்தால், அவள் தனித்துத் தான் வீட்டிலை நிற்கவேண்டிவரும். காலம் வேறு கெட்டுக்கிடக்கிறது. நாள்தோறும் பத் திரிகைகளில் வரும்செய்தி அவளின் நெஞ்சைத் துளைத்தது. பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம், கற்பழிப்பு, ஏழுவயதுச் சிறுமி கடத்தல். இவ்வாறு பற்பல செய்திகள்.

''அம்மா நான் போட்டுவாறன்'' கூறியவாறு றெயின் கோட்டுக்குள் தஞ்சமடைந்த காருண்யா பைசிக்கிளை எடுத்தவாறு புறப்பட்டுவிட்டாள்.

சாருஜா வழமையாக மோட்டார் பைசிக்கிளில்தான் அலுவலகத்துக்குச் செல் வாள். மழைக்காலம் ஆகையால் பைசிக்கிளை எடுத்துவந்து கைப்பையை பைசிக்கிள் கூடைக்குள் போட்டாள். நேரத்தைப் பார்த்தாள். 8.05 ஆகிவிட் டது. வழமையைவிட 5 நிமிடம் பிந்தி விட்டது. ஓடி ஓடி அறைகளைப் பூட்டியவள் பைசிக்கிளை எடுத்துக் கொண்டு கேற்றடிக்குவந்தாள். பைசிக்கிளின் பின்ரயர் காற்றுப்போய் நின்றது. மீண்டும் வாயிற்கதவைத் திறந்து பம் எடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை. மனம் பதட்டப்பட்டதுடன், குமுறவும் தொடங்கியது.

''சீ... இதுகளும் ஒரு பிள்ளைகளா'' காலையிலேயே காற்றைப் பார்க்குமாறு மகனிடம் கூறியிருந்தாள் சாருஜா. அவளின் அவசரம், அந்தரம் யாருக்கு விளங்கப்போகிறது. மாதக்கடைசி வேறு. அலுவலகத்தில் நிறைய வேலைகள் காத்துக்கிடக்கும். வாய்க்குள் புறுபுறுத்தவாறு பம்மை எடுத்துக் காற்றடித்தாள். அது ஏற மறுத்தது. காற்றடித்துப் பழக்கமும் இல்லை. மழையும் பெய்துகொண்டிருந்தது. குடை யைப் பிடித்தவாறு பக்கத்து வீட்டுக்கு ஓடினாள். அங்கு காற்று அடிக்கத்தக்கதாக ஒருவரும் நிற்கவில்லை. அருகில் இருந்த இன்னோர் வீட்டுக்கு ஓடினாள்.

''இவ்வளவுக்கும் காரணம் எனது பிள்ளை'' நெஞ்சம் திட்டத் தொடங்கியது.

வேலைக்குப் புறப்பட இருந்த இளைஞன் ஒருவன் சாருஜாவின் பதட்டத்தையும், அவல நிலையையும் பார்த்து மனமிரங்கி

''வாங்கக்கா நான் காற்றடித்து விடுகிறேன்'' என்று சாருஜாவை விலத்திக் கொண்டு சென்று, காற்றடித்துவிட்டுப் பைசிக்கிளைக் கேற்றடிக்குக் கொண்டு வந்து விட்டான். மீண்டும் பம்மை உள்ளே வைக்கச் சென்றவள் நேரத்தைப் பார்த்தாள் 8.18. பத்து நிமிடங்கள் எனது பிள்ளையால் வீணாகிப் போய்விட்டது. நச்சரித்தவள், கேற்றைப்பூட்டிக்கொண்டு பைசிக்கிளை ஏறி உழக்கத் தொடங்கினாள்.

பைசிக்கிள் நெளிவு சுழிவான ஒழுங்கைகளைக் கடந்து பிரதான வீதிக்கு வந்தது. சாருஜாவுக்குக் கற்பனை செய்வதற்கோ, கதைகள் எழுதுவற்கோ நேரம் காலமோ, நல்ல மனநிலையோ தேவையில்லை. இந்த அவசரமான வேளையிலேகூட, அவளது எண்ணங்கள் சிந்திக்க, சிதறடிக்கத் தொடங்கியது.

ஒருகை குடையைப் பிடிக்க ஒருகை பைசிக்கிள் கான்ட்டிலைப் பிடித்தது. சாறியை ஓரளவு நனையவிடாமல் றெயின் கோட் பாதுகாத்துக் கொண்டது. எல்லாவற்றுக்கும் மேலாக அவளது கண்கள் பைசிக்கிளை ஒரு தடவை பார்த்துக்கொண்டது. மனிதனால் செய்யமுடியாத வேலையை இந்தப் பைசிக்கிள் செய்கிறதே. சாருஜாவின் நிறை அறுபத்தைந்து கிலோவையாவது தாண்டும். திரைப்படங்களில் கதாநாயகன் கதாநாயகியைத் தூக்குவான். சாருஜாவை ஒருவரால் தனித்துத் தூக்க முடியாது ஏன்? சாருஜா தன்னையே தூக்கி நடக்க முடியாமையினால்தான் நடப்பதே குறைவு. விழுந்து கிடந்தால்கூட சாருஜாவைத் தூக்க நாலு பேராவது வேணும்.

இந்த நிலையில் சொற்ப காற்று என்னைச் சுமக்கிறதே. பஞ்ச பூதங்களில் கண்ணால் பார்க்கமுடியாத ஒன்று இந்தக் காற்றுத்தான். இதை உணருகிறோமே தவிர, இதைத் தொட்டுக்கூடப் பார்க்கமுடியாது. அப்படிப்பட்ட காற்றின் வலிமையை, பெருமையை மனதிற்குள் வியந்து கொண்டாள்.

''பாதையைப் பார்த்துப் போங்கம்மா'' என்ற குரல் அவளைப் பாதையைப் பார்த்து ஓடவைத்தது. மனம் எங்கு சென்றாலும் பாதையைக் கவனித்துத்தான் வழமையாக ஓடுவாள். இவ்வாறு ஒரு நாளும் யாரிடமும் ஏச்சு வாங்கியதில்லை. சிறிது அவமானமாகப் போய்விட்டது. சொன்னவர் யாரென்று தெரியாது. ஆனாலும் மனதில் சிறு நெருடல்.

எதிரே மினிபஸ் ஒன்று வந்துகொண்டிருந்தது. இவ்வளவு பயணிகளையும் சுமந்துகொண்டு வருகிறதே, இதற்குக்கூட இந்தக் காற்றுத்தானே பயன்படுகிறது. பெற்றோல் இல்லாவிட்டால் மண்ணெண்ணையைப் பயன்படுத்துவார்கள். காற்றுக்குப் பிரதியீடு உண்டா? செயற்கையாக உருவாக்குவது வேறு.

ஆகாயத்தில் விமானம் பறப்பதற்கும், கடலில் கப்பல் செல்லுவதற்குக்கூட இந்தக் காற்று அவசியமானதுதானே. ஏன் நாம் உயிர்வாழ்வதற்குக்கூட இந்தக் காற்று அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறதே.

மனம் கற்பனையில் மூழ்க, பலமாக வீசிய காற்று சுர்ரென்று குடையைப் பின் தள்ளியது. குடை மறுபக்கம் திரும்பிக் கொண்டது.

''சீ... இதென்ன காற்று.''

பைசிக்கிளை நிறுத்திய சாருஜா முணுமுணுத்த வண்ணம் குடையைச் சரிப் படுத்தினாள். சற்றுமுன் காற்றின் மகிமையை நினைத்துப் பூரித்த மனம் சில விநாடிகள் செல்லவில்லை. திட்டித் தீர்த்து விட்டது.

மீண்டும் பைசிக்கிள் சாருஜாவைச் சுமந்துகொண்டுவந்து, அலுவலக வாசல் முன் நிறுத்தியது. அங்கே அவள் கண்ட காட்சி ஒரு கணம் மனதைச் சில்லிட வைத்தது. பாதையைத் தடைசெய்தவாறு மரங்கள் ஆங்காங்கே முறிந்து கிடந்தன.

''சூறாவளி வரப்போகுதெண்டு நியூஸ் வந்ததெல்லே. அதுக்கு ஆரம்பம்தான் இது.'' முறிந்த கிளைகளை வெட்டி அப்புறப்படுத்திக் கொண்டிருந்த பியோன் செந்தில் கூறினார்.

சற்றுமுன் பாராட்டுக்குட்பட்ட காற்று, செய்த வேலையை நினைத்துக் கொண்டாள் சாருஜா. செந்தில் சொன்ன வார்த்தைக்குக் காது கொடுத்தவள்போல் ஒரு சிறு புன்னகையை உதிர்த்துவிட்டுத் தனது ஆசனத்தில் போய் அமர்ந்தாள். கையொப்பம் இடும் புத்தகம் மேசைக்கு வந்தது.

அலுவலக வேலைகளையெல்லாம் அவசரமாகச் செய்துமுடித்தவளுக்கு, வீடு செல்லும் நினைப்பும் நேரமும் நெருங்கிவிட்டது. மழைகாலம் ஆனால் ஒரு இடமும் நின்று வேலைசெய்ய முடியாது. போட்டது போட்டபடி இருந்தது. மீதி வேலைகளை இனித் தான் செய்தாக வேண்டும். ஒருவாறு வேலைகள் முடிந்து, பிள்ளைகளின் கடமைகளையும் செய்துவிட்டுத் தொடர்ச்சி யாகப் பார்க்கும் நாடகத்தைப் பார்ப்பதற்காக T.Vயை ஓண் பண்ணினாள். நாடகம் தொடங்கி ஒரு காட்சி முடிந்து விளம்பரம் நடந்துகொண்டிருந்தது.

''வீட்டில் இருக்கும் பெண்கள் எவ்வளவு புண்ணியம் செய்தவர்கள்.'' ஒரு காட்சியைப் பார்க்கத் தவறியதன் மனத் தாங்கல் அவளது புலம்பலில் நன்கு தெரிந்தது. ''வேலை செய்யும் பெண்கள் கொடுத்து வைத்தவர்கள்'' என்று வீட்டில் இருக்கும் பெண்கள் சொல்வது சாருஜாவுக்குத் தெரியுமா என்ன?

அக்கரைக்கு இக்கரை பச்சைதானே. விளம்பரம் முடிந்ததும் அடுத்த காட்சியைப் பார்க்க ஆவலாய் இருந்தவளுக்கு ''முக்கிய அறிவித்தல்'' என்று சொன்ன செய்தி அவளைத் திக்குமுக்காடச் செய்தது. அறிசத்தில் கடும் சூறாவளியால் சுமார் இரண்டாயிரம் பேர் இடப்பெயர்வு, 30 பேர் மரணம், 75 பேரளவில் சூறாவளியில் சிக்குண்டு அவஸ்தை. மீட்புப்பணி தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.''

காலையில் காற்று தன்னைச் சுமக்கிறதே என்று பெருமைப்பட்ட சாருஜாவுக்கு, இவ்வளவு அழிவுகளுக்கும் இந்தக் காற்றுத்தானே காரணம்.

''கொன்றன்ன இன்னா செய்யினும்
அவர் செய்த ஒன்று நன்று உள்ளக்
கெடும்''

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் குறள் ஒன்று வந்து மோதியது. தொடர்ந்து நாடகத்தின் காட்சி வந்தது. ஆனால் சாருவால் பார்க்கமுடியவில்லை. T.Vயை ஓவ் செய்துவிட்டு தனது வீட்டுக் கடமைகளைத் தொடரலானாள்.

# சாத்தானேறிய கடல்

என்றைக்கும்
சாத்தானிடம் தோற்றுப் போவதே
கடவுளுக்கு வழக்கமாகி விட்டது.

ஆதிநாளில்
மானுடப் படைப்பின்பொழுது
ஆதாம் ஏவாள் விடயத்தில்
சாத்தானிடம்
தோற்றுப் போனான் கடவுள்.
அன்றிலிருந்து சாத்தானிடம்
சரணாகதியாகிப் போனது உலகம்.
இதோ இப்பொழுது மீண்டும் சாத்தான்
கடலேறி வந்திருக்கிறான்.

இத்தருணத்தில் எங்கிருக்கிறாய் கடவுளே...
வானம் கிழித்து வெளியே வா...
தோல்விகளால் துவண்டு துவண்டு
முகம் மோதுண்டு வாழ்ந்தவுன்
குரூபியான வதனமதை
நான் நன்றாகப் பார்க்கவேண்டும்.

இங்கே பார்...
என்னென்ன படையணிகளை
நாமுனக்குப் படைத்திருக்கிறோ மென்பதை
மனித வர்க்கத்தின் மண்டையோடுகள்
எலும்புக் குவியல்களின் தசைத் துண்டங்கள்
குழந்தைகள் உடலில் குழம்புக் கறி
இடையிடையே ருசிக்குமென்பதற்காய்
மிருகங்களின் பிணத்தில் வறுவல்
எல்லாமுனக்கு மட்டுமே
நன்றாய்ப் புசித்து பசியாறு.



படையலுக்குகூட முடியாதுபோனவற்றை
பூமியிலிட்டுப் புதைத்திருக்கிறோம்.
வேண்டும்போதெல்லாம் உண்டு மகிழ்.
விக்கலெடுத்தால் அதோ பார்...
உதிரம் கலந்ததால் உப்புக் கூடியிருக்கிறது
சாத்தானேறிவந்த கடல் நீர்
அள்ளி தாகம்தீர அருந்து.

உனக்குரிய அர்ச்சனைக்காய்
கள்ளிமலர் களினாலும் எருக்கலம்
பூக்களினாலும்
மாலை தொடுத்து வைத்திருக்கிறோம்
சூடிக்கொள்.
பிள்ளையிழந்தவரின் கூக்குரலும்
கணவனையிழந்தவள் ஒப்பாரியும்
உறவுகளைப் பறிகொடுத்தோன் புலம்
பலும் தான்
உனக்கு நாம் பாடும் முகாரிப் பாசுரங்கள்
ஏற்றுக்கொள்.

இதுகாறும் இலையனைத்தையும்
சாத்தானுக்கே நாம் படையலாக்கினோம்
இன்றுமுதல் சர்வமும்
உனக்கே சமர்ப்பணமாகட்டும்.

பஞ்ச பூதங்களுக்கெல்லாம் பதியாய்
விளங்குபவன் நீதானாமே!
என்ன மாயம் செய்தான் சாத்தான்.
கடலினை உன்னிடமிருந்து கவர்ந்து கொள்ள
சாத்தான் கடலேறி வரும்பொழுது
அலை நாக்குகள் அளவில்லா நீளம்
யார் கொடுத்த கொடும்வரமோ
யார்தான் அறிதல் கூடும்.

கடவுளே...
முடிந்தால் சாத்தானை வெற்றிகொள்
புராணங்களில் மட்டும் புதையுண்டு கிடக்கும்
புதுமைகளுக்கு இந்நவயுகத்தில்
புனர் ஜென்மம் கொடு
வேண்டுமானால் என் கவிதையை
அன்றைக்கு மாற்றியெழுதுகிறேன்.

-வேல்.லவன்-



# கொடை வள்ளல் நீ கொலை வள்ளல் ஆனதேன்



அள்ளிக்கொடுத்து, கரையோரத்தில் வாழ இடம்கொடுத்து என்றும் உன்னிடம் சேர்ந்து அலைபட்டு மகிழ்ந்த உறவு உன்னையும் சேர்த்து வாழ்ந்த வாழ்வில் எங்களைப் பிரித்தும் எங்கள் அருகில் ஏன் வாழ்கின்றாய்?


அள்ளிக்கொண்டு சென்றதனால் எங்கள் உறவின் உயிர்களைத் தேடுகின்றோம். கடலே நீ வந்து போயிருக்கலாம், எங்களையும் சேர்த்துக் கொண்டு போனாய், கொன்று போனாய்.

உப்புக் கசக்கும் கடல் அள்ளிக் குடித்து, முள்ளுக் குத்தும் மீன் பிடித்துத்தின்று, வளம் பெற்ற எமது பாதையில் வலம் வந்த கடலும், அணைத்து நின்ற எமது வாழ்வை அணைத்துச் சென்றதே. திமிர் கொண்டு கொதித்த உனது பார்வை எமது பார்வையில் ஏன் விழுந்தாய்?

வலைவீசி இரவுபகல் அள்ளிவந்த செல்வங்கள் உன்னால்தான் ஒப்புக்கொள்கிறோம். கடல் கடந்து கரைதொட்ட வாழ்வும் உன்னால்தான் ஒப்புக்கொள்கிறோம். அமைதிகொண்டு கரையில் வாழ்வு கொண்டதும் உன்னால்தான் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் ஒப்பனை கூடச் செய்துபார்க்க முடியாத அவலங்களைக் கொடுத்ததும் உன்னால்தான் நீயே ஒப்புக் கொள்வாயா?

பனையளவு தூரம் உயர்ந்துவந்து, படைகூட மிரண்டுநின்ற கணப்பொழுதுகள் எமது கண்ணை மறைத்து மூச்சுத் திணற, அள்ளிக்கொண்டு சென்றது. ஒவ்வொரு மூலையிலும் உயிரற்ற உடலாகப் போட்டுவிட்டு, குடும்பத்தில் ஒருவரையாவது விட்டுவிட்டுப்போக உனக்கு எப்படி மனம் வந்தது.

கடலில் உயிர்தின்ற காலம்போய், கடலே கரைக்குவந்து உயிர்தின்றுபோனதே. போராட்ட வாழ்வில் அழிவுகளாய் வாழ்ந்த மக்களிடம் மேலும் அழிவுகளைத் தொடுத்த கடலே, கூடவே நாங்களும் வாழ்ந்தது தவறானதா.



ஆழ்கடல் என்று தெரிந்தும், உன்னை எங்கள் வளங்களில் ஒன்றாக்கினோம். கொடுத்துக் கொடுத்து கழித்ததால் மீட்டுக்கொண்டு போய் விட்டாய்.

பொறுமை உன்னிடம் இருக்கிறது. நல்ல சுபாவம் உன்னிடம் இருக்கிறது. வீரம் உன்னிடம் இருக்கிறது. அமைதி உன்னிடம் இருக்கிறது. உணர்வு உன்னிடம் இல்லாதபோது இவையனைத்தும் உன்னிடம் இருந்து என்ன பயன்.

தினம் இரவுபகல் விழித்திருந்து, பெரிய கப்பலில் இருந்து, சிறிய படகுவரை, மிதக்கும் தோணியிலும், மீன் பிடிக்கும்வரை தாங்கி நின்று கடலில் போகும் இடமெல்லாம் வழிவிட்டு மீண்டும் கரைசேர்த்து விடுவாய்.

கொடை வள்ளல் நீ. கொலை வள்ளல் ஆனதேன். உனது உறவுகளின் அழுகுரல்கள் கேட்கிறதா. கல்லுக் குவியலாக வீடுகளும், உயிரற்ற உடல்களும், இடிபாடுகளுக்குள் தேடுகின்ற உறவுகளும், ஒருவரை ஒருவர் தாங்கிக்கொண்ட வாழ்வில் பாதுகாப்புக் கூடவாக இருந்தது. ஆனால் கண்முன்னே ஒருவரை ஒருவர் கைவிட்டுத் தன்னைக்கூடப் பாதுகாக்க முடியாமல் போனபோதுதான், கடலே உனக்கு மனமில்லாமல் போனது.

ஒரே நேரம் உலகக்கரை எங்கும், அவலம் தொட்டுக்கொண்டபோது, கரை எங்களைத் தொடாமல் கடல் கொண்டு போனது. வாழ்வில் எந்தப் பாதிப்பையும் ஈடுசெய்ய முடிந்தது. ஆனால், கடற்பாதிப்பில் ஈடுசெய்ய முடியாமல் இருக்கின்ற கரையோரங்கள் ஓடங்களைத் தேடாமல் செயல் இழந்து இருக்கின்ற போதும், துடுப்பு கைவிட்டும் இனி எப்படிப் பயணிக்க முடியும்.

வலைவீசி இழுக்கின்றபோது கடல் விட்டுக்கொடுக்கின்ற ஒவ்வொரு தடவையும் பயம் தெரியாமல், ஆழக்கடல் மீன் பிடித்து வந்தோம். கடல் அலைவீசி இழுத்தபோது, கடல் விட்டுக்கொடுக்காமல் ஒரு தடவையில் உறவுகள் உயிர்குடித்ததே...

உனது இடம்தேடி வந்து உன்னுடன் பழகுகின்றபோது, நீ ஆபத்தானவன் என்று யாருக்கும் தெரியவில்லை. எமது இடம் வந்தபோதுதான் நீ ஆபத்தானவன் என்று தெரிந்துகொண்டோம்.


கரையோர வாழ்விடங்களின் வாசல்படி அலை ஏறி விளையாடும், வெண்பரப்புப் புழுதி மண் அழகாகப் பரவிவர, கோலம் போட்ட அலை நுரையும், அலையில் வந்த நண்டுகளும் ஏதோ கிறுக்கிப்போக, மாலைப் பொழுதும், காலைப்பொழுதும் அழகாக மறைந்து விடியும் நாட்களில், கடல் நீரில் முகம் கழுவி வாழும் வாழ்வில் எல்லாமே பொய்யாகிப் போனபோது, உனது அழகும் கற்பனையானது.

கடலில் கம்பிவேலி அமைத்து நேவியும், கரையில் காவல் அரண் அமைத்து ஆமியும் இருக்க சுனாமி வந்தது. புதுப்புது ஆமியைக் காணும் மக்களுக்கு அழிவுகள் கூடவாகத்தான் இருக்கிறது எனும்போது மனம் வலிக்கிறது.

ஆழம் தெரியாத கடலின் நடுவில் நங்கூரம் இட முடியாதபோதும், கைவிடாத கடலின் அமைதி, ஆழம் தெரிந்த கரையில் நங்கூரமிட்டு இருந்தும், கைவிட்டுச் சென்றதே.

உப்புக்காற்றின் ஈரத்தில் முழுநிலவே மூழ்கிப் போகும், அலை பரந்த விரிப்பில் தாராளமாகச் சாய்ந்துவிடும் இரவில், வெளிச்சம் இல்லாமல் கரையோர வாழ்விடங்கள் வெளிச்சம் காணப் படகேறும்போது, வழிவிட்டு நம்பிக்கையுடன் காத்திருக்கும் உறவுகள் தமது வாழ்வை நம்பாது, கடலை நம்பி வாழ்ந்த இந்த வாழ்க்கையில் ஈரம் ஊறிய மனதில் என்றைக்குமே காயாமல் நனைத்துக் கொண்டி ருந்ததனால்தான் அழைத்துக் கொண்டு சென்றாயா.

வானம் இருள் கொண்டு மழைவரும் தெரிந்தது. இடிகொண்டு மின்னல் வரும் தெரிந்தது. மழையில் வெள்ளம் வரும் தெரிந்தது. கடும் வெயிலில் உடல் எரியும் தெரிந்தது. கடல் தாண்டி எமது வாழ்விடங்களில் அலைவரும் என்று தெரியாமல் போனபோதுதான் நீ வெற்றிகண்டாய்.



ஆழக்கடல் தேடி நாம் வந்தபோது உனது தோளில் எம்மைத் தூக்கித் தூக்கி ஆடியபோது, உயிருள்ள உடலாக இருந்தோம். எமது வாசற்படிவந்து உனது தோளில் எம்மைத் தூக்கித் தூக்கி ஆடியபோது உயிரற்ற உடலாக எப்படி ஆனோம்.

செல்வா

# தேடலும் பகிர்தலும்



றெஜி சிறிவர்தன


ஒரு முழு வாழ்வை வாழ்ந்து முடித்த இந்த முழு மனிதர், தமது எண்பத்திரண்டாவதுவயதில் அண்மையில் காலமானார். அவர் யார் என்று கேட்போருக்கு நாம் பல விதமான பதில்களைச் சொல்ல வேண்டியிருக்கும். சிறந்த இலக்கியவாதி, நாடகாசிரியர், நாவலாசிரியர், கவிஞர், மொழி பெயர்ப்பாளர், சிறுவர்களுக்கான எழுத்தாளர், மிகச் சிறந்த கலை இலக்கிய விமர்சகராக மட்டுமன்றி, அரசியல் விமர்சகராகவும் போற்றப்படுபவர். ஆங்கில மற்றும் ருஷ்ய மொழிகளில் விற்பனர். சிறந்த இடதுசாரி. இவை யாவற்றுக்கும் மேலாக சிறந்த மனிதாபிமானி.

சிங்களப் பாரம்பரியமும், ஆங்கில மொழிவழிக் கல்வியும் அவரில் சுவறியபோது; இன, மொழி எல்லைகளைக் கடந்த ஒரு மனிதனாக மட்டுமே அவரால் தம்மை இனங்காண முடிந்தது.

'டெயிலி நியூஸ்' பத்திரிகையாளனாகத் தம் வாழ்வை ஆரம்பித்த திரு.சிறிவர்த்தன, ஆசிரியராயும், விரிவுரையாளராகவும் பணி புரிந்தவர். யாழ்.பல்கலைக்கழகத்திலும் ஆங்கில வருகை விரிவுரையாளராகச் சில காலம் பணியாற்றினார். தமது இளம் பராயத்தில், இலங்கை சமசமாஜக் கட்சியில் அது தடை செய்யப்பட்டிருந்த வேளையிலும் உற்சாகமாகச் செயற்பட்டார்.

வயது அவரின் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் தடையாக இருந்ததில்லை. ருஷ்ய மொழியைக் கற்கத் தொடங்கியபோது நடுவயது தாண்டியிருந்தார். அவருடைய நாவல் 'இழந்த லெனோர்' வெளியானபோது அவருக்கு வயது எழுபத்து நாலு.

## அமலி



முல்லை யேசுதாசன்

நிதர்சனம் வெளியீடான 'ஒளி வீச்சு' 106 நல்லதொரு குறும் படத்தையும் தன்னுள் கொண்டுள்ளது.'

ஏறத்தாழ இருபது நிமிடங்கள் ஓடும் இந்த 'அமலி' என்ற படம் அருமையான கதை ஒன்றைக் கொண்டுள்ளது. எழுதியவர் முல்லை யேசுதாசன். திரைக்கதை மற்றும் இயக்கம் சண்.

இராணுவச் சுற்றிவளைப்புக் காலங்களில் இடம்பெற்ற ஒரு பாலியல் வன்முறை எந்த அளவுக்குப் பின்னர் பகுத்தறிவு பூர்வமாகவும், யதார்த்தமாகவும் ஒரு இளைஞனால் பார்க்கப்படுகிறது என்பதுதான் கதை. காதல், பயம், புரிந்துணர்வு எல்லாம் மிக்கவனாக உள்ள இளைஞன், அவனைக் காதலித்த போதும் ஆபத்து வேளையில் கைவிட்டு விட்டானே என்ற ஆத்திரமும், வன்முறைக்குப் பலியாக நேர்ந்த அவலமும் கொண்டு துடிக்கிற இளம் பெண், இருவருந்தான் கதையின் அடிப்படை. மண்ணிற் காலூன்றி நிற்கிற மிக இயல்பான பாத்திரங்கள். இந்த இருவரின் பெற்றோர் பாத்திரங்களுங்கூட அவ்வாறே.

பாத்திரங்களுக்கேற்றவாறு இயல்பாக அலட்டிக்கொள்ளாமல் நடிக்கும் தன்மை எமது படங்கள் எல்லாவற்றுக்குமே பொது. அது, அமலியில் வருகிற எல்லோரிலும் ஒரு சிறு பாத்திரம் நீங்கலாக? தெரிகிறது. படப்பிடிப்பு, இசையமைப்பு எல்லாமுங்கூடச் சிறப்பாகவே உள்ளன.

எல்லாமிருப்பினும், என்னை 'அமலி' கவர்ந்ததன் காரணம் கதை என்றுதான் படுகிறது.

சாந்தன்

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் சுத்திகரிக்கப்பட்ட நீரையே அருந்தவேண்டும்!

## மாகாண சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கடற்கொந்தளிப்பின் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை அருந்துமாறு சுகாதார சேவைகளுக்குப் பொறுப்பான மாகாண பிரதி பணிப்பாளர் கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களுக்கு நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புக்குப் பொறுப்பான வைத்திய நிபுணர் கலாநிதி சிங்கா விக்கிரமசேகர சகிதம் விஜயம்செய்து அவதானித்த விடயங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நலன்புரி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள குடிநீர்த் தாங்கிகளில் நீரைச் சுத்திகரிக்கக்கூடிய வில்லைகள் போடப்பட்டுள்ளன. இந்த நீரையே மக்கள் அருந்தவேண்டும்

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் தொகையிலானவர்கள் ஒரே இடத்தில் வசித்துவருவதால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தொற்றுநோய்கள் இல்லை. ஆனால், ஏற்படக்கூடிய நிலை காணப்படுகின்றது.

நோய்கள் வந்த பின்னர் தடுக்கும் நடவடிக்கைகளிலும் பார்க்க தடுப்பு நடவடிக்கைகள் முக்கியமானதாகவே கருதப்படுகிறது. சுத்தமான குடிநீர் பருகுதல், மலசல கூடங்களைப் பயன்படுத்தல் அவசியமாகும்.

நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களுக்கு மாற்றுவதற்கு உள்ளாடைகள் இல்லை. குழந்தைகளை நுளம்புக்கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு வலைகள் இல்லை போன்ற குறைபாடுகள் நிலவுவதாக அங்கு சென்று திரும்பியுள்ள வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை சுகாதார அமைச்சிலிருந்து ஆறு லொறிகளில் மருந்துப் பொருட்கள் கிளிநொச்சி, புதுக்குடியிருப்புப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதனைவிட தனி நபர்களும், பொது நிறுவனங்களும் மருந்து வகைகளை வழங்கியுள்ளதால் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. திருப்திகரமாகவுள்ளது.

வைத்தியக் குழுவினரும் வன்னிக்குச் சென்றுள்ளனர். இதனைவிடத் தனிப்பட்ட வைத்தியக் குழுவினரும் பணியாற்றுகின்றனர். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்குச் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட றப்பர், பாதணிகள், நுளம்பு வலைகள், ஆண் - பெண்களுக்கான உள்ளாடைகள், சிறு குழந்தைகளுக்கான உடுபுடவைகள், தடித்த கையுறைகள், பால் போத்தல், வெற்றுநீர்ப் போத்தல் (சுடு தண்ணீர் போத்தல்) பெண்களுக்கான சுகாதார துவாய் வகைகள் போன்றனவே அவசியமாகத் தேவைப்படுகின்றன. வன்னிக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வோர் இந்தப் பொருட்களை எடுத்துச் செல்லுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

### புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் கிளிநொச்சி தபாலகத்திற்கு புதிய வாகனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் தபாற்சேவைக்கென புதிய வாகனம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

இந்த மாவட்டத்தின் தபால் சேவையை மேம்படுத்தும் முக மாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சால் வழங்கப்படவுள்ள தபால் கொண்டுசெல்லும் வாகனம் விரைவில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வழங்கப்படவுள்ளதென அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

20 வருடங்களுக்கு மேலாக தபாற்சேவை சீரின்மையாகக் காணப்படுகிறது. இதனால் பூநகரி, கண்டாவளை ஆகிய பகுதிக்கான தபால் விநியோகத்தை விரைவுபடுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (9)

# புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் தங்கள் உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாகச் செய்யவேண்டும்

## வண.பிதா கருணாரெட்ணம் அடிகளார்

(கிளிநொச்சி)

கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாயகத்து மக்களும், புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும் தாராளமாக உதவிகளைச் செய்துவருகின்றனர். பெருமளவு பொருட்களை அனுப்பிக்கொண்டிருக்கிறனர். அவர்களை நாம் நன்றியோடு பாராட்டுகிறோம் என வட - கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குநர் வண.பிதா மரியாம்பிள்ளை கருணாரெட்னம் அடிகளார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொடர்ந்து இந்த மக்கள் மீளக் குடியேறமுடியாத அளவுக்கு அழிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் புதிதாகக் கட்டுமானங்களை மேற்கொள்வதற்காகப் பாரியளவு நிதியுதவி இன்று தமிழர் தாயகத்துக்குத் தேவைப்படுகிறது. இதற்கு தாராளமாகப் பங்களிப்புக்களை விரைவாகத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உண்மையிலேயே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முழு வேலைத்திட்டத்தையும் பொறுப்பெடுத்து, எல்லோரையும் இணைத்து சிறப்பாகச் செயற்படுத்திக்கொண்டிருக்கிறது.

இங்குள்ள மத அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் எல்லோருமே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்துதான் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றனர்.

ஆகவே, உடனடியாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக முடியுமான உதவிகளைச்செய்து அனுப்புமாறு புலம்பெயர்ந்து வாழும் உறவுகளிடம் கேட்டுக் கொள்கிறோம்.

நீண்டகாலத்துக்கு இந்த மக்கள் குடியேறமுடியாது என்ற காரணத்தினாலே அவர்கள் தங்கியிருப்பதற்கான இடங்கள் போதியளவில் இல்லை. போதிய அடிப்படை வசதிகள் இல்லாத பாடசாலைகளில்தான் மக்கள் இருக்கிறார்கள். உண்மையிலே அவை மனித சுகாதாரத்திற்கு உகந்ததல்ல.

ஆகவே, உதவிசெய்ய விரும்புகின்ற நிறுவனங்களுக்கு மீளக் குடியமர்ந்து வாழ்வதற்கு அமைக்கக்கூடிய கூடாரங்களை விரைவாக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கமுன்வரவேண்டும். அத்துடன் குடிநீர் பெரிதும் பிரச்சினையாகவே உள்ளது. ஆகவே, தாராளமாகப் பவுசர்களை இந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பி, குடிநீர் வழங்குவதற்கு உதவவேண்டும்.

எமது மக்களின் நிலைப்பாடுகளை சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவபபடுத்தி, வெளிக்கொணரவேண்டும். ஏனெனில் ஒருசில பிரதேசங்களின் செய்திகளை மட்டும பிரசாரப்படுத்திக்கொண்டிருககிறார்கள்.

வடக்கு - கிழக்கில் குறிப்பாக முல்லைத்தீவு போன்ற பிரதேசங்கள் அழிவடைந்தவேளை அந்தச் செய்திகளை வெளிக்கொணர ஊடகங்கள் முன்வரவில்லை என்பதுதான் வேதனையான விடயம்.

எனவே, அனைத்து ஊடகங்களும் எந்தவிதமான பாரபட்சமுமில்லாமல் எமது பிரதேச அழிவுகளை வெளிக்கொணரவேண்டும் என்றும் உருக்கமாகக் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தனர்.




# சுனாமி தாக்குதலால் வாடி வதங்கி நிற்கும் உறவுகளை மலரவைக்க பெருநிதி தேவை!

## தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை தலைவர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சுனாமி பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட தமிழீழத் தாயக உறவுகளுக்கு உதவிகள் புரியுமாறுகோரி, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் வண.பிதா பிரான்சிஸ் யோசப் அடிகளார் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

வரலாற்றுக் காலத்துக்கு முன் எமது அறிவுச் செல்வங்களான ஏராளமான சங்கத் தமிழ் இலக்கிய ஏடுகளைக் கடல் கொள்ளை கொண்டதையும், தெற்கே பரந்திருந்த பழந் தமிழ் நிலப்பரப்பைக் கடல்கோள் கவர்ந்துவிட்டதையும், கடைச்சங்க இலக்கியங்களூடாகப் படித்திருக்கின்றோம். ஆயினும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுக் காலத்தில் அதுபோன்ற கடல்கோள்களை, கடற்பெருக்குகளை நாம் எப்போதும் எதிர்கொள்ளவில்லை.

எனினும் தற்போது வரலாற்றுக் காலத்தில் நடந்திராத, கேள்விப்பட்டிராத இயற்கைப் பேரழிவை சுனாமி கடற்பெருக்கு தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்படுத்தியிருக்கிறது. தெற்கு தென்கிழக்காசிய நாடுகளில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் கொள்ளைகொண்ட இந்தப் பேரழிவில் எமது தாயகத்தில் மட்டும் ஒரே நாளில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர். அதைவிடப் பலமடங்கு மக்கள் பேரலைகளால் தள்ளிச் செல்லப்பட்டு மரங்கள், வேலிகள், வீடுகள் போன்றவற்றில் மோதுண்டு படுகாயங்களுக்குள்ளாகி, இன்னலுறுகின்றனர். பல லட்சம் மக்கள் வீடு, வாசல், உடைமைகள், உறவுகள் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக முகாம்களிலும், மருத்துவமனைகளிலும், தெரிந்தவர்கள், நலன் விரும்பிகளின் இல்லங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மண்ணிலும், கட்டட இடிபாடுகளுக்குள்ளும் புதையுண்டவர்களது உடல்களையும், கடல் நீரால் அடித்துச்செல்லப்பட்டவர்களது உடல்களையும் தேடும்பணி தொடர்கிறது. குழந்தைச் செல்வங்களையிழந்து பெற்றோரும், பெற்றோரை இழந்து குழந்தைகளும் தவிக்கும் தவிப்பு சொல்லில் வடிக்கமுடியாது. அவர்கள் பழைய நிலைகளுக்குத் திரும்ப நீண்டகாலங்கள் எடுக்கலாம்.

சுனாமியின் தாக்கத்தால் குடும்ப உறவுகளையும், உடமைகளையும் இழந்து தவிக்கின்ற லட்சக்கணக்கான எமது உறவுகளைப் பராமரிக்க அவர்களுக்கான உணவு, உடை, உறையுள், மருத்துவம் போன்ற தேவைகளை நிறைவு செய்வதில் சிங்கள அரசு பாராமுகமாக இருந்து வரும் நிலையில் எமது உறவுகளின இன்னல்களைந்து, துயர் துடைக்கும் பாரிய பொறுப்பை எம்மவர்களே மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

எமது முன்னோர்களான பல நூறு தலைமுறையினருக்கு ஒரு போதும் ஏற்படாத இன்னலை சுனாமியின் வடிவத்தில் இயற்கையின் சீற்றம் எம்மை எதிர்கொள்ள வைத்திருக்கிறது. எனவே எம் முன்னோருக்கு ஏற்படாத பெருந்துயர் துடைககும் இந்தப்பணி வரலாற்றுக் கட்டாயமாக எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலால் வாடி வதங்கியிருக்கும் எம் உறவுகளை மலரவைக்க, அவர்கள் துயர் துடைத்து நிமிர வைக்க பெருநிதி தேவைப்படுகிறது.

இழந்த இறைமையை மீட்டு உரிமைகளையும், பெருமைகளையும் எம் இனத்துக்குப் பெற்றுக் கொடுக்கும் பெரும் பொறுப்பைச் சுமந்து விடுதலைக்கு வழிகாட்டி வரும் எமது தேசியத் தலைவர் தனது நிதியத்தில் இருந்து பெரு நிதியை வழங்கி, அமைப்பின் பல்வேறு பிரிவினரையும் முழுமையாக இந்தத் துயர்துடைக்கும் பணியில் நிறுத்தி துயர்துடைக்கும் பணி தொய்வின்றித் தொடர வழிவகுத்திருக்கின்றார்.

எனவே, நிலைமையையும் தேவையையும் உணர்ந்து எமது வீட்டுககு, உறவுக்கு ஏற்பட்ட இன்னலைத் துடைக்க உதவுவது போன்று எம்மாலியன்ற ஆகக்கூடிய நிதியை வாரி வழங்கிக் காலம் எம்மீது சுமத்திய வரலாற்றுக் கடமையை நிறைவு செய்வோம்.

உலக வரலாற்றுப் போக்கையும் எமது வரலாற்றுக் கடமையையும் நன்குணர்ந்து கொள்ளக்கூடிய கல்விச் சமூகத்தவர் அனைவரும் இந்தமாத ஊதியத்தை முழுமையாகவேனும், ஒரு பகுதியையேனும வழங்கி உதவ வேண்டும். பள்ளிகள் மீண்டும் திறந்து தவணை தொடங்கியபின் மாணவர்கள், பெற்றோர்கள் உதவிகளையும் திரட்டி வழங்க வேண்டுமென தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை அனைவரையும் வேண்டி நிற்கிறது என அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டது.



பளை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினரைப் படத்தில் காணலாம்.



அண்மையில் இடம்பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்பால் முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைந்திருந்த கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று அழிவுற்ற நிலையில் இருப்பதைக் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வில்ஏர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க*
*சொல்ஏர் உழவர் பகை.*

*திருக்குறள்*

## நமது நோக்கு

### சுனாமி அலைகளைவிடவும் கொடிய பேரினவாத நாசகார அலைகள்

சுனாமி கடற் கொந்தளிப்பால் இழப்புக்களையும், அவலங்களையும் சந்தித்த நிலையில் உடலியல் மற்றும் உளவியல் ரீதியிலான பாதிப்புகளுக்குள்ளாகி - நொந்து, வெந்துபோயிருக்கும் மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான சர்வதேச உதவிகள் வந்து குவிந்து கொண்டிருப்பதாக ஊடகத்தகவல்கள் கூறுகின்றன.

இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புக்களுககுள்ளானோர்க்கு அவர்களின் இன்னல்களைத் துடைக்கும் பணியில் மனித நேயப்பண்புடனும், சமூகப் பொறுப்புடனும் முன்வந்து செயற்படும் பல்வேறு நாடுகளும், பொது அமைப்புகளும், தனியார் நிறுவனங்களும் இன்றைய துயர்துடைப்பு நடவடிக்கைகளில் அர்ப்பணிப்பு உணர்வுடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளமையானது நம்பிக்கை தரும் விடயமாகும்.

காலத்தினால் செய்யப்படும் இந்த உதவிகள் எக்காலத்திலும் நன்றியுடன் நினைக்கப்படும் என்பது உறுதி.

'உடுக்கை இழந்தவன் கைபோல்...' இடுக்கண்களையத் துடித்தியங்கிக் கொண்டிருக்கும் மனிதம் இன்னும உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருப்பதால் தான் மனித குலம் மீதான நம்பிக்கை இன்னமும் வற்றாத நிலையில் உள்ளது.

எனினும், பாதிக்கப்பட்டவரை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் அல்லது அவமதிக்கும் குரூரநெஞ்சினரும் இல்லாமல் இல்லை. இவர்களின் மனிதநேயமற்ற செயல்களை நோக்கும்நெஞ்சில் வெஞ்சினம் பொங்கவே செய்கிறது.

நேற்றைய பத்திரிகையில் இதே பகுதியில் இது குறித்து எமது மனக் கொதிப்பை வெளிப்படுத்தி இருந்தோம்.

ஆனாலும், இத்தகைய கொடிய மனத்தினர் தமது செயல்களைத் தொடர்ந்து மேற்கொள்ளவே செய்கின்றனா என்பது தான். வேதனைதரும் விடயமாகும்.

உதவி செய்ய விரும்பாது இருக்கலாம். ஆனால், உதவி செய்கிறோம் என்று கூறிக்கொண்டு உபத்திரம் கொடுப்பதுதான் மிகவும் எரிச்சலூட்டும் கீழ்த்தரமான செயலாகும்.

அண்மையில் மனித பாவனைக்கு எந்தவிதத்திலும் உதவாதெனக் கழித்து விடப்பட்ட அரிசியினை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்க - யாழ். மாவட்டப படைத் தலைமை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில ஒப்படைத்ததாகவும் அதனை அரசஅதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கமுற்பட்டபோது மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் செய்திகள் வெளியானது தெரிந்தவிடயமே...

நேற்றுமுன்தினம் பாதிக்கப்பட்ட மக்கள் அகதிகளாகத தங்கி நிற்கும் குடத்தனை மத்தி நலன்புரி நிலயத்திற்குள புகுந்த படையினர் அங்கிருந்த சிறுவர்களை அழைத்து உணவுப் பொருட்களை வழங்கி அவற்றை உண்ணுமாறு வற்புறுத்தியவேளையில், பெற்றோர்கள் அதனைத் தடுக்க முயன்ற வேளை இரு தரப்பினருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து கோபமுற்ற படையினர் அங்கிருந்த மக்களை அந்த நிலையத்தை விட்டு வெளியேறுமாறு விரட்டியுள்ளனர். அத்துடன், அப்பகுதிக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தையும் துண்டித்துள்ளனர். இதன்போது ஏற்பட்ட தர்க்கத்தில் படையினர் தாக்கியதில் ஒரு பொதுமகனும், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி ஒருவரும் காயமுற்றனர். படையினரின் இந்த அடாவடித்தனத்தால் அச்சமுற்ற பாதிப்புக்குள்ளான மக்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறி அப்பகுதியிலுள்ள அன்னை வேளாங்கன்னி மாதா கோவிலில் தஞ்சம புகுந்துள்ளனர்.

இதேவேளை சுனாமி தாக்கத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் வதிவிடங்களில் இருந்து மக்களின் அனுமதியின்றி அவர்களின் வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள், கூரைத் தகடுகள். போன்றவற்றை எடுத்துச் செல்லும் கொடுமையைப் புரியும் படையினர் அவற்றைப் பயன்படுத்தி புதிய காவலரண்களை அமைத்துவருகிறார்களாம். அதுமட்டுமல்ல கடற்கரை மீனவர்களின் குடியிருப்புப் பகுதிகளை அண்டியுள்ள படகுத்துறைப் பகுதிகளையும் ஆக்கிரமித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


இதுதான் படைத்தரப்பினர் மேற்கொள்ளும் நிவாரணப்பணிகளின் லட்சணம் என்று பல தரப்பினரிடமிருந்தும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் உதவியும் வேண்டாம், உபத்திரமும் வேண்டாம் என்றே பாதிக்கப்பட்ட மக்களின் குரல்கள் ஒலிக்கின்றன. பொதுமக்கள் படைத்தரப்பின் அட்டூழியம் குறித்து கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு தெரிவித்துள்ள போதிலும் இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

இது ஒருபுறம் இருக்க கிழக்கில் நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதற்கு பேரினவாத சக்திகளும், ஆயுதப்படையினர் சிலரும் தொடர்ந்து இடையூறுகள் செய்வதாகவும் மட்டக்களப்பு நகரிலுள்ள உணவுக் களஞ்சியத்திலிருந்து பலாத்காரமாக நிவாரணப் பொருட்களை அபகரித்துச் செல்லும் முயற்சியில் பிக்கு ஒருவர் ஈடுபட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இந்தப் பிக்குவின் முயற்சி முறியடிக்கப்பட்ட போதிலும் அவரின் பௌத்த தர்ம சிந்தனையின் தன்மையை புரிந்துகொள்ள முடிகின்றதல்லவா.

சுனாமி அலை தாக்கி ஏற்படுத்திய அனர்த்தம் இயற்கையின் விதி என ஏற்றுக்கொண்டு ஆறுதலடைந்தாலும், அதைவிட கோரமானதும் இரக்கமற்றதுமான பேரினவாத அலை இந்த நாட்டில் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தாக்கவே போகிறது என்ற எச்சரிக்கைச் சமிக்ஞைகளாகவே மேற்குறித்த சம்பவங்களை தமிழ் மக்கள் உணரவேண்டியுள்ளமை தவிர்க்கவே முடியாத பேரவலம் என்றே கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# அரசியல் தலைவர்கள் தமது சொந்தப் பணத்தில் உதவுவரா?

வரலாறு காணாத பேரனர்த்தத்தை நாடும், மக்களும் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். கணப்பொழுதில் எல்லாவற்றையும் இழந்த மக்கள் உடுக்கத்துணிகூட இல்லாத அவலநிலையில் அந்தரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் அந்தரிக்கும் மக்களுக்கு உதவுவதற்கு வசதி படைத்தவர்கள் மட்டுமல்ல, நாளாந்தம் உழைத்துப் பிழைக்கும் மக்கள்கூடத் தங்களால் இயன்ற உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகள் அள்ளி அள்ளி வழங்கி உதவிக்கொண்டிருக்கின்றன. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமிருந்தும் மக்கள் உதவிக்கரம் நீட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் நாட்டில் எமது அரசியல் தலைவர்கள் அறிக்கை விடுவதில் தவறுவதில்லை.

ஆனால் இதுவரை அரசியலில் உழைத்துச்சேர்த்த அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் தமது சொந்தப் பணத்தில் அல்லற்படும் மக்களுக்காக சிறு தொகையையாவது வழங்கியிருக்கிறார்களா?

வெளிநாடுகளிலிருந்துவரும் உதவிகளை எந்தெந்தப் பகுதிக்கு, யார்யாருக்கு, எப்படியெப்படிப் பங்கிடவேண்டும், இவற்றை எப்படியெப்படிப் பகிர்ந்து அனுப்பவேண்டும் என்பது பற்றி இந்த அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் ஆலோசனை கூறுவதிலும், அறிக்கை விடுவதிலும் குறைவில்லை.

இந்த அரசியலில் தாம் உழைத்த தமது சொந்தப் பணத்தில் அல்லற்படும் மக்களுக்காகச் சிறுதொகையையாவது வழங்க முன்வரவேண்டும்.

இதுமட்டுமல்ல - கிடைக்கும் உதவிகளில் ஊழல்கள் இடம்பெறாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கே அவை போய்ச் சேர வேண்டுமென்பதிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவிக்கும் வாசகர் கடிதங்கள் சில கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரியொன்றில் வெளிவந்திருக்கின்றன.

அதிபர் சந்திரிகாவிலிருந்து சிறிய அரசியல்வாதிகள் வரை தமது சொந்தப் பணத்தில் அல்லற்படும் மக்களுக்குத் தமது பங்களிப்பைச் செலுத்தவேண்டுமென்று இந்தக் கடிதங்கள் எழுதியவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இதற்கு விரைவில் பிரதிபலிப்புத் தெரியும் என்று எதிர்பார்க்கலாம்.

கப்பல்கள் வருகின்றன, ஹெலிகள் பறக்கின்றன, உதவிக்கு ஆட்களும் வருகின்றனர்.

ஆனாலும், கிழக்கில் பல இடங்களிலும் தங்களுக்கு உதவி கிடைக்கவில்லையென்று நேற்றுவரை எழுப்பிய குரல் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது.

போக்குவரத்துச் செய்வதற்குச் சீரான பாதைகள் இல்லை. சாலைகள் யாவும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. ஆனாலும், ஹெலிகள் இந்த இடங்கள் பலவற்றுக்கும் அதிலும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குச்சென்று உதவ முடியாதா?

மீட்புப் பணியிலும், உதவியளிக்கும் தொண்டுப் பணியிலும் ஈடுபட்டுள்ளவர்கள் மிகச்சிரமத்துடன்தான் பணியாற்றவேண்டிய நிலையிலுள்ளனர் என்பதை மறுக்க முடியாது.

நிர்க்கதியாக நிற்கும் மக்கள் உதவிப் பொருள்களைப் பெறுவதற்கு முண்டியடித்துக்கொண்டு போராடுவார்களென்பதைச் சொல்லித் தெரியவேண்டுமென்றில்லை.

சோமாலியா போன்ற ஆபிரிக்க நாடுகளில் பல சமயங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளில், ஏன் அயல்நாடான இந்தியாவில்கூட நெருக்கடியான சமயங்களில் நிவாரண உதவியைப் பெறுவதற்காக முண்டியடித்த நேரங்களில் நெரிசல்களில் கூட மக்கள் பலர் மாண்டிருக்கின்றனர்.

இதுபோன்ற சமயங்களில் 'வல்லான் வகுத்ததே வழி' என்று பலசாலிகளே கூடிய பங்கைப் பறித்துச் செல்வதுமுண்டு.

விடுதலைப்புலிப் போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்த 'வல்லவர்கள்' அல்லது 'வில்லன்கள்' கையோங்குவது சுலபமல்ல.

ஆனால், இதர பகுதிகளில் சில இடங்களில் நிவாரணப் பொருள்கள் பங்கிட்டுக்கொடுக்கமுடியாமல் 'வல்லவர்கள்' கும்பலினால் தட்டிப் பறித்துச் செல்லப்படுவதாகவும் குற்றம் சொல்லப்படுகிறது.

உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களைவிட பாதிக்கப்படாமல், பாதிக்கப்பட்டதாகக் காட்டி உதவி பெறுபவர்களின் 'நாட்டாண்மை' தாங்கமுடியாதிருப்பதாக மட்டக்களப்பிலிருந்து வந்த தகவல் ஒன்று தெரிவித்தது.

நிவாரண உதவியை எடுத்துக்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த முகாமுக்குச் சென்றவர்களை வழியில் கூடிநின்ற ஒரு கும்பல் தாக்கிக் காயப்படுத்தி, தட்டிப்பறிக்க மல்லுக்கட்டியபோது, அது மோதலாக வெடித்ததாம். இதன்பின் இராணுவம் அந்தப் பகுதிக்கு வரவழைக்கப்பட்டதாகவும் மட்டக்களப்பிலிருந்துவந்த மற்றொரு தகவல் நேற்றுமுன்தினம் இரவு தெரிவித்தது.

மட்டக்களப்பில் பல நாட்களாகக் கடைகள் திறக்கப்படவில்லை. கடைகள் திறப்பதற்கும் அங்கு விற்பதற்கும் எந்தப் பண்டமும் இல்லை!

நிவாரணப் பொருள்கள்கூடப் பின்னர் சில கடைகளில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த நெருக்கடியில் மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளில் மீண்டும் கடும்மழை பெய்து, அகதிகள் தொகையை அதிகரித்திருக்கிறது. ஓரளவு போக்குவரத்துச் செய்யக்கூடியதாக இருந்த வீதிகளும், பாதைகளும் இந்தப் பெருமழையால் மீண்டும் சீர்குலைந்து போயிருக்கின்றன.

இதேசமயம், மட்டக்களப்பு நகரப் பகுதியில் அகதி முகாம்களிலுள்ளவர்களுக்கு இப்பொழுது எந்தக் குறையுமில்லையென்றும் - ஓவல்ரின், நூடில்ஸ் முதலிய நல்ல உணவுப் பொருள்கள் கிடைப்பதாகவும் மட்டக்களப்புத் தகவல் ஒன்று சொல்கிறது.

மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார்கோயிலில் அகதிகளாகத் தங்யிருந்தவர்கள், கோயில் பகுதியை அசுத்தப்படுத்தி வந்ததால் அவர்களை வேறு இடங்களுக்குச் செல்லுமாறுகூறி கோயில் நிர்வாகம் அவர்களை நேற்று வெளியேற்றிவிட்டதாம். இவர்கள் அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரத்துக்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் ஒரு தகவல் கிடைத்தது.

இந்த இயற்கை அனர்த்தத்தின்போது மிருகங்கள் சாகவில்லையென்ற செய்தி ஆச்சரியமாகப் பரவியிருக்கிறது.

இதேசமயம், சில மாதங்களுக்குமுன் மட்டக்களப்பில் கல்லடிப்பாலத்துக்கருகில் கடலுக்கருகில் ஆயிரக் கணக்கில் வெள்ளை - நீலப் பாம்புகள் திரண்டுவந்து சிலமணி நேரம் அங்கு நர்த்தனம் ஆடிக்கொண்டிருந்தன. இதைப் பொதுமக்கள் பலரும் கூட்டம் கூட்டமாகச் சென்று பார்த்து வியந்து, ரசித்துச் சென்றனர். எப்போதுமே இப்படி ஒரு காட்சி ஏற்பட்டதில்லையென்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். இதற்குமேல் இதுபற்றி யாரும் ஆராய முற்படவில்லை.

இந்தப் பாம்புகள் இவ்வளவு பெருந்தொகையாக வந்துசென்றது இந்தப் பேரனர்த்தம் பற்றியறிந்து அவைகள் அப்பகுதியிலிருந்து குடிபெயர்ந்து வேறிடத்துக்குச் செல்லும் ஒரு சந்தர்ப்பத்தில்தான் என்று இப்போது மக்கள் பேசிக்கொள்கிறார்கள். கடல் பூகம்பம் பற்றி இவைகள் முன்கூட்டியே தெரிந்துதான் இடம் பெயர்ந்து சென்றிருக்கின்றன என்று இப்போது மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இயற்கை அனர்த்தத்தின்பின் மட்டக்களப்பில் கிணற்று நீர்கூட உப்புநீராக மாறிவிட்டதாம். நல்ல குடிநீருக்குப் பெருங்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம். ஆனால் அகதிமுகாம்களில் அகதிகளாக உள்ளவர்களுக்கு 'மினரல் வாட்டர்' என்ற நல்ல குடிநீர் போத்தல்களில் கிடைப்பதாக அகதியாகாத ஒருவர் கவலையுடன் சொல்கிறார்.

தமிழில் வல்வையூரான்

# ‘சுனாமி’ கடற்கொந்தளிப்பு அனர்த்தம் படைத்தரப்புக்கு ஏற்படுத்திய அழிவுகள்!

**கடந்த 26ஆம் திகதி சுனாமி கடற் கொந்தளிப்பால் படைத்தரப்புக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து ‘லக்பிம’ சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.**

டிசம்பர் 26 ஆம் திகதி நத்தார் கொண்டாட்டத்துக்கு மறுநாள் விடியற்காலை வழமைபோல் படையினர் தமது கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பதுங்குகுழிகள் மற்றும் காவலரண்களில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த படையினர், மற்றைய நாட்களைப் போலவே கடலில் தமது பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தனர்.

இந்தவேளை, ஒருதடவை கடலின் அலையடி மாறுபட்டிருந்ததைக் கடற்படையினர் கண்டனர். இதன்பின்னர் கடல் அலையின் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. கடற் பக்கமாகத் தமது கழுகுப் பார்வையைச் செலுத்திக் கொண்டு பொது எதிரிகள் வரும்வரை காத்திருக்கும் படையினர், அப்போது கடலில் ஏற்பட்ட வேறுபாட்டை உணர்ந்து கொண்டனர். அந்த வேளை கடல் அலைகள், 20 அல்லது 30 அடி உயரத்துக்கு எழும்பியிருந்தன. கண் முன்னாலேயே காணாமற் போனது.

கிரிந்த கடற்படை முகாமின் உபபிரிவும் கழுவுப்பட்டுச் சென்றது. அங்கு முகாம் இருந்ததற்கான அடையாளமே இல்லை. நிலாவெளியில் அமைந்திருந்த விஜயபாகு முகாமுக்கும் இதுபோன்றதொரு தலைவிதியே ஏற்பட்டது.

**‘சுனாமி’ கடற்கொந்தளிப்பு கடற்புலிகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால், விடுதலைப் புலிகள் தற்போதைக்கு போரைத் தொடங்கும் நிலையில் இல்லை என்று கூறி, சிங்கள மக்களைத் திருப்தி செய்ய முயன்றுள்ள ஜனாதிபதி அதே கடற்கோளால் படைத்தரப்பினருக்கு ஏற்பட்ட பாரிய அழிவுகளை மறைக்க முயன்றுள்ளார் என்பதில் ஐயமில்லை.**

கிழக்கின் கடற்படை கட்டளையிடும் அதிகாரியின் அலுவலகம் அமைந்திருந்த திருமலைத் துறை

மற்றைய மோட்டார் சைக்கிளின் பின்னால் தனது உதவியாளரையும் ஏற்றியவாறு இறங்குதுறையின் மறுபக்கத்தில் நின்ற லெப்ரினன்ட் கொமாண்டர் சில்வாவும் அலையின் தாக்குதலில் இருந்து தப்ப முடியவில்லை. 30 அடி உயரத்தில் வந்த அலை காங்கேசன்துறை முகத்தை மூழ்கடித்து, உத்தர கடற படை முகாம் பக்கமாக அடித்துச் சென்றது. லெப்ரினன்ட் கொமாண்டர் சில்வாவுடன் 15 கடற்படையினர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இரண்டு நாட்களின் பின்னர் சில்வாவின் உயிரிழந்த உடல் மீட்கப் பட்டது. அவரது தலை தகர்ந்து சிதறிப் போயிருந்தது.

இந்த கடற் கொந்தளிப்பு இடம் பெற்றவேளை, காங்கேசன்துறை முகாம் நோக்கி 710 படையினருடன் வந்து கொண்டிருந்த பேனர்ள் குருசர் எனும் துடுப்புக்காவி கப்பல் துறை முகத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. இது 5 தொடக்கம் 10 மைல் தூரத்துக்கு அப்பால் கடலில் நின்ற காரணத்தால்,



காலி கடற்படைத்தள இறங்குதுறை அருகே நீரில் மூழ்கிய நிலையில் பராக்கிரமபாகு போர்க்கப்பல்

பாரிய அலையின் தாக்கத்தால் கேணல் குணரட்ணவும், மனைவியும் மகளும் வீழ்ந்தனர். அதனால் கலவரமடைந்த கேணல் குணரட்ண மகளையும், மனைவியையும் காப்பாற்றிவிட்டு, கழிப்பறைக்குச் சென்ற மகனைத் தேடி முகாம் பக்கமாக ஓடி வந்தார். இவர்கள் மீண்டும் வந்த அலையால் முகாமோடு சேர்ந்து வீசப்பட்டனர்.

கடற்கரையோரங்களிலிருந்த அனைத்து முகாம்களும் ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே அழிந்து போயின. இந்தத் தாக்குதலில் அகப்பட்ட படையினர் மற்றும் ஆயுதங்கள் இருந்த இடங்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாமற்போனது.

இறந்துபோனவர்களின் விபரங்கள் - யாழ்ப்பாணம் ஒரு அதிகாரி, படையினர் 33பேர், அம்பாந்



கடற்கொந்தளிப்பைப் படையினர் கண்டனர். மிகப்பெரிய அலையொன்று படையினரின் பதுங்கு குழிகளை மூடியவாறு தரை நிலத்தை உடைத்துப் பாய்ந்தது. திகைப்பும், மலைப்பும், அடைந்த படையினர் ஓடத்தொடங்கினர். அவர்களது பதுங்கு குழிகளையும், ஆயுதங்களையும் கடல் அள்ளிச் சென்றது. இரண்டாவது அலைத் தாக்குதல் படையினரின் முகாமை அழிக்கும் வகையில் உடைத்துப் பாய்ந்தது. இந்த இரண்டாவது அலையால் படைமுகாம்கள் அழிந்து போயின.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறை, மணற்காடு முகாம்களும் திருமலையில் நிலாவெளி, சல்லி, கோபாலபுரம், மூதூர், அலஸ் தோட்டம் புடவைக்கட்டு முகாம்களும், காலியில் தக்சின, தங்கல்ல, கிரிந்த கடற்படை முகாம்களும் முற்றிலுமாக அழிக்கப்பட்டன.

இராணுவத்தினர் பருத்தித் துறை, கற்கோவளம், கல்லடி, களுவங்கேணி, கஜுவத்தை, மாங்கேணி உட்பட பல முகாம்களும் அழிந்துபோயின. காலி தக்சின முகாமென்பது தெற்கு வலயத்தின் பொறுப்பு வாய்ந்த பிரதான கடற்படை முகாமாகும். அதன் கட்டளையிடும் அதிகாரி துசித முகாமில் தங்கியிருந்ததுடன், கப்பல் மற்றும் தாக்குதல் படகுகளும் முகாமின் உள்ளேயே இருந்தன.

தக்சின முகாமின் நிர்வாக அலுவலகம், மற்றும் கடற்படையினரின் வீடுகளும் முழுவதுமாக அலையுடன் இழுபட்டுச் சென்றன. ஆயுதங்கள் அனைத்தும் அடித்துச் செல்லப்பட்டன. கடற்படையின் வருண கிரண நடவடிக்கையில் ஈடுபட்ட பிரதான கப்பலான பராக்கிரமபாகு விளையாட்டுப் படகைப்போன்று கடற்கரையில் வந்து கவிழ்ந்து போனது.

படையினரையும், பொருட்களையும் ஏற்றிச்செல்லும் நடுத்தர அளவிலான எல்.சி.எம். (ரணகஜ) படகும் அமிழ்ந்து போயிற்று. கடற்படையின் படகுகளும், முகாம்களும் அழிந்து நாசமாயிற்று. அங்கு ஏற்பட்ட அழிவுகள் எவ்வளவென்று கூறமுடியாததாகும்.

தெற்கிற்குச் செல்லும் கடற்படைப் படகுகளுக்கு எரிபொருள் வழங்கும் தங்கல்ல முகாமும் இதே போன்று அழிவுக்குள்ளானது. அங்கிருந்த மிகபபாரிய எண்ணைத தாங்கி இருந்த இடமே தெரியாமல்

முகமும் இந்தவிதமாகவே நீரினுள் மூழ்கிப்போனது.

திருமலை மற்றும் தெற்கில் உண்டான சம்பவங்கள் குறித்து மற்றைய முகாம்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு இராணுவத் தலைமையகம் நடவடிக்கை மேற்கொண்டது. வடக்கின் கட்டளையிடும் கடற்படைத் தலைமையகத்துக்கு இந்தச் செய்தி உடனே கிடைத்தது.

காங்கேசன்துறை உத்தரமுகாமில் நங்கூரமிடப்பட்டிருந்த அதிவேகத் தாக்குதல் கப்பலும் மற்றும் படகுகளையும், கடலில் விடுவிக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. உத்தர முகாமின் கட்டளை நடவடிக்கை உத்தியோகத்தர் கொமாண்டர் ஜகத் ரணசிங்க மற்றும் துறைமுகத்தின் பாதுகாப்பு பொறுப்பதிகாரி எம்.எஸ்.எ.சில்வா ஆகியோர் மோட்டார் சைக்கிளில் ஏறி, துறைமுக இறங்குதுறைக்குச் சென்றனர். விரைவாக அங்கு நின்ற தாக்குதல்



சுனாமி கடற்கொந்தளிப்பால் பருத்தித்துறை கடற்கரைப்பகுதியில் அழிந்த நிலையில் காவலரண்கள்.

கப்பலும் மற்றும் இருவேறு படகுகளும் கடலில் விடப்பட்டன. அப்போது உத்தர முகாமைச் சூழவுள்ள கடலில் மற்றைய நாட்களை விட கடுமையாக கடல் அலைகள் எழுந்தன. சில நிமிடங்களுக்குள்ளேயே அலை உயர எழுந்து முகாம் பக்கமாக வந்தது.

மோட்டார் சைக்கிளில் சென்று படகுகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட கட்டளை உத்தியோகத்தர் ரணசிங்க, தனது மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்தி முன்னே சென்றார்.

இந்தக் கப்பல் தப்பித்துக்கொண்டது. கப்பலில் இருந்த எவருக்கும் தரையில் நிகழ்ந்த அனர்த்தம் தெரியவில்லை.

இந்தக் கடற்கொந்தளிப்பால் கடற்படைக்குச் சொந்தமான கொழும்பு புத்துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருந்த ரங்கல கடற்படை முகாம் பாரிய அழிவுக்குள்ளானது.

கடற்படையினருக்கு இந்தத் தலைவிதி நேர்ந்தபோது வடக்கு - கிழக்கில் அமைந்த இராணுவ, பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம்களுக்கும் இது போன்ற பாதிப்புக்கள் ஏற்பட்டன. அறுகம்பை, கோமாரி, கல்லாறு, சாஸ்திர வேலிமுகாம்களும் அழிந் தன.

மட்டக்களப்பு, 233 ஆவது படையணியின் தலைமையகம் உட்பட கல்லடி, கஜுவத்த, மாங்கேணி, காயங்கேணி, களுவாங்கேணி முகாம்களும் முழுவதுமாக அழிந்துபோயின.

பாடசாலை விடுமுறை காரணமாக தனது மனைவி, பிள்ளைகளை முகாமுக்கு அழைப்பித்த கேணல் குணரட்ண மற்றும் அவரது 13 வயதான டிலான் தனஞ்செயவும் இந்தப் படையணி முகாமில் அடித்த அலையில் அள்ளுண்டு போயினர். கடற்கரையிலிருந்து தன்னை நோக்கிப் பாரிய அலை வருவதனை அவதானித்த குணரட்ண-முகாமிலிருந்த குழுவினருக்குத் தெரியப்படுத்தினார். அந்தச் சமயம் எழுந்து வந்த

கேணல் குணரட்ணவும் மகன் தனஞ்செயவும் பலியானதுடன், மனைவியும், மகளும் தமிழ் கிராமத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தமிழ் மக்களால் பாதுகாக்கப்பட்டனர்.

கல்லடி இராணுவ முகாம் முழுவதுமாக அழிந்ததுடன், அங்கிருந்த பீரங்கியும் தண்ணீருடன் அள்ளுண்டு சென்றது. அத்துடன் அதற்கான குண்டுகளும் அள்ளுண்டு சென்றன. மாங்கேணி முகாம் நீரில் மூழ்கிய சந்தர்ப்பத்தில் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள ஓடிய கெமுனு படையணியின் படையினரும், ஒன்றுமே தெரியாமல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடிச் சென்றனர்.

இவ்வாறு கிரிமிச்சைக்குச் சென்ற 15 பேர் புலிகளால் காப்பாற்றப் பட்டதுடன், மீளவும் அவர்கள் தமது முகாம் செல்ல உதவினர்.

யாழ்ப்பாணத்தில் நாகர் கோயிலிலிருந்து பருத்தித்துறை வரை

தோட்டை ஒரு படைவீரர், களுத்துறை 3 படையினர், மட்டக்களப்பு ஒரு அதிகாரி, 11 படையினர், காலி ஒரு அதிகாரி. மொத்தமாக 3 அதிகாரிகளும் 55 படையினரும் உயிரிழந்தனர்.

காணாமற்போனவர்கள் இராணுவம் - யாழ்ப்பாணம் 6 படையினர், மட்டக்களப்பு ஒரு அதிகாரி மற்றும் 7 படையினர், காலி ஒரு படைவீரர், மொத்தமாக ஒரு அதிகாரியும் 14 படையினரும்.

கடற்படையில் 2 அதிகாரிகளும் 14 கடற்படையினரும் உயிரிழந்தனர். உயிரிழந்த அதிகாரிகள் கேணல் டபிள்யு.எம்.எஸ்.குணரட்ண - கல்குடா, கப்டன் டி.ஜே.எ.எஸ் இந்துறில் (மாங்கேணி) லெப்ரினன்ட் பிறேமசிறி (மணற்காடு), மேஜர் சிறிநாத் விக்கிரமசிங்க (விடு முறையில் சென்றிருந்தபோது ஹிக் கடுவையில்) லெப்.கொமாண்டர் சில்வா (காங்கேசன்துறை) லெப்ரினன்ட் எம்.ஜயவிலால் ஆகியோராவர். ❄

## ஜனவரி – 03

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

◣ 1558 – இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரசியிலுள்ள பொற்கோயிலின் கட்டட அடிக்கல் மியான்மீர் என்னும் முஸ்லிம் துறவியால் நடப்பட்டது.

◣ 1840 – கடலின் ஆழத்தைக் கண்டறிய ஒலியை முதன் முதலாகப் பயன்படுத்திய தினம் இன்றாகும். ‘‘செயின்ட் ஹெலினா’’ அருகே கடலின் ஆழத்தைக் கண்டு பிடிக்க H.M.S.எரிபன் என்ற கப்பலில் சென்ற சேர்.ஜேம்ஸ்ராய் என்பவர் ஒலியைப் பயன்படுத்தி கடலின் ஆழத்தை அளந்தறிந்தார்.

◣ 1919 – பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடியிருப்பு அமைப்பதை லண்டனில் நிறைவேறிய ‘‘ஸ்பெய்ஸல் - வெயிஸ்மான்’’ ஒப்பந்தம் வரவேற்றது.

◣ 1921 – வானிலை முன்னறிவிப்பை வானொலி மூலம் ஒலி பரப்ப ஆரம்பித்த தினம் இன்றாகும். மாடிஸ்ஸனிலுள்ள வின்கோஸ் சீஸ் பல்கலைக்கழக வானொலி நிலையம் இந்த ஒலிபரப்பை முதன் முதலில் துவக்கியது.

◣ 1961 – அமெரிக்க-கியூபா நாட்டுடனான தனது இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக்கொண்ட நாள் இன்றாகும்.

◣ 1968 – உலகத் தமிழ் மாநாடு சென்னையில் கோலாகலமாக இன்று துவங்கியது. இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகீர் ஹூசைன் இன்று மாலையில் நடந்த அலங்கார ஊர்திகள் ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார்.

◣ 1995 – தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா அரசுக்குமான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகிய நாள் இன்றாகும்.


தொகுப்பு – சந்துரு

# அசாமில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு; எச்சரிக்கிறார் அமெரிக்க விஞ்ஞானி

(புதுடெல்கி)

கடந்த வாரம் சுமாத்திராவில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் தொடர் அதிர்வுகள் வடக்கு நோக்கி நகர்வதால் அசாம் மாநிலத்தில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்க விஞ்ஞானி எச்சரித்துள்ளார்.

வேர்ஜினியாவில் ஜோர்ஜ் மேசன் பல்



கலைக்கழகத்தின் புவிக் கண்காணிப்பு மற்றும் விண்வெளி ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் டிசெம்பர் 26 ஆம திகதியிலிருந்து ஆசியப் பகுதியில் ஏற்படும் நில அதிர்வுகளை ஆராய்ந்து வருகின்றனர்.

விஞ்ஞானிகள் குழுவில் ஒருவரான ரமேஷ் பி.சிங் டெல்கியில் கூறியதாவது-

ஆசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தொடர் அதிர்வுகள் 90 பாகை செங்குத்துக் கோணத்தில் வடக்கு நோக்கிச் செல்கின்றன.

தொடர்ந்து இந்த அதிர்வுகள் வடக்கு நோக்கிச் சென்றால் அசாம் மாநிலத்தில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்படும்.

அசாமில் நிலநடுக்கம் ஏற்படும் என்று நீண்டகாலமாகவே விஞ்ஞானிகள் அஞ்சி வருகிறார்கள். மியான்மார் அருகே டிசெம்பர் 30 இல் றிக்சர் அளவுகோலில் 5 புள்ளிகள் அளவுள்ள நில நடுக்கம் பதிவானது.

சுமாத்ரா அருகே ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தொடர் அதிர்வுகளால் இது ஏற்பட்டிருக்கலாம். தொடர் அதிர்வுகள் வடக்கு நோக்கிச் செல்வதையே இது காண்பிக்கிறது.

நீண்ட காலமாக அசாமில் பெரிய நில நடுக்கம் எதுவும் ஏற்படவில்லை. எந்த நேரமும் அசாமில் நில நடுக்கம் ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தற்போது வடக்கு நோக்கிச் செல்லும் அதிர்வுகள் அடங்கிவிடுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், அசாம் நில எல்லையை அடைவதற்கே அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இந்திய அரசு விழிப்புடன் இருக்கவேண்டும் என எச்சரிக்கிறேன்.



இந்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அசாமில் புவியோட்டின் இயக்கங்களைக் கண்காணிக்க செயற்கைக்கோள் இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. அதைக் கொண்டு தொடரும் நில அதிர்வுகளை கண்காணிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அந்தமானின் நில அமைப்பு சுனாமியால் மாறிவிட்டது!

(புதுடெல்கி)

நில அதிர்வு மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி அலைகளின் தாக்கத்தால் அந்தமான், நிகோபர் தீவுகளின் நில அமைப்பு மாறிவிட்டது.

இந்தப் பிரதேசத்தில் இருந்து பல கடற்கரைப் பகுதிகளை பார்க்கமுடியவில்லை. டிரிங்கெட் என்ற தீவு இரண்டாக பிளவுபட்டுள்ளது.

பல இடங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. அழகிய கடற்கரைகள், கேம்பெல் பே போன்ற பல தீவுகள் மாயமாக மறைந்துவிட்டன.

இந்தத் தகவலை, ஒருங்கிணைத்த நிவாரண படையின் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ்.தாகூர் போர்ட் பிளேரில் தெரிவித்தார்.

கார் நிகோபர் பகுதி மோசமாக பாதிக்கப்பட்டு அதில் சில ப்குதிகள் நீரில் மூழ்கிவிட்டன.

போர்ட் பிளேர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடல் மட்டம் உயர்ந்துள்ளது.

இருப்பினும் எந்தத் தீவும் வெள்ளத்தால் முற்றிலும் அடித்துச் செல்லப்படவில்லை எனவும் லெப்டினன்ட் ஜெனரல் தாகூர் தெரிவித்தார்.

## தாய்லாந்தில் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டவேளை

# யானையில் சவாரிசெய்த சிறுவர்கள் உயிருடன் காப்பாற்றப்பட்ட அதிசயம்!

(பாங்கொக்)

கடற்கொந்தளிப்பு ஏற்பட்டபோது யானை மீது சவாரி செய்துகொண்டிருந்த சிறுவர்கள் எவ்வித பாதிப்புமில்லாமல் காப்பாற்றப்பட்ட உணர்வுபூர்வமான சம்பவம் தாய்லாந்தில் புகெட் கடற்கரைப் பகுதியில் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

தாய்லாந்தின் புகெட் கடற்கரையில் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். அந்த சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கில் அங்கு யானையொன்று வரைவழைக்கப்பட்டிருந்தது. அதன்மீது சிறுவர்கள் ஏறி சவாரி செய்து கொண்டிருந்த வேளையே கடற்கொந்தளிப்பு ஏற்பட்டது.

முன்னதாக யானை மீதிருந்த சிறுவர்கள் விழுந்துவிடாமல் இருப்பதற்காக அவர்களை யானை மீதிருந்த ஒரு தடுப்பில் பாகன் கட்டிவைத்திருந்தார். கடற்கொந்தளிப்பின்போது நீரில் யானை மிதந்துசென்றபோதும் அதன் மீதிருந்த சிறுவர் உயிருடன் தப்பினர்.

இதுபோலவே மலேசியாவிலும் பிறந்து 20 நாளேயான குழந்தையொன்று மெத்தையில் படுத்திருந்த நிலையில் உயிருடன் மீட்கப்பட்ட அதிசயம் நடந்துள்ளது.

மலேசியாவில் பினாங் நகரில் புகழ்பெற்ற பாது பெரிங்கி கடற்கரையில் உணவுபொருட்கள் விற்பனை செய்யும் கடை வைத்திருப்பவர் சுப்பையா. இவரது மனைவி அன்னாள் மேரி. இவர்களது 20 நாள் குழந்தை துளசி.

கடந்த 26 ஆம் திகதி காலை கடையின் பின்புறம் இருந்த ஒரு அறையில் தரையில் போடப்பட்டிருந்த சிறிய மெத்தையில் குழந்தை துளசி தூங்கிக்கொண்டிருந்தது. சுப்பையா கடையில் இருந்தார். அன்னாள் மேரி மற்றொரு பகுதியில் வேலை செய்துகொண்டிருந்தார்.

அப்போதுதான் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. சுப்பையா கடல் நீரால் இழுத்துச் செல்லப்பட்டார். அவரது கடை மூழ்கத் தொடங்கிவிட்டது.

இது குறித்து சுப்பையா கூறுகையில்-

கடல் நீர் என்னை பல அடி தூரம் தூக்கியெறிந்து விட்டது. அங்கிருந்த ஒரு தூணைப் பிடித்துக்கொண்டு நான் உயிர் பிழைத்தேன். கடையின் பின்புறம் இருந்த அறையில் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது. அங்கேயும் கடல் நீர் புகுந்துவிட்டது.

எனது மனைவி அன்னாள் மேரி கடல் நீரில் நீந்தியபடி அந்த அறைக்கு சென்றார். நல்லவேளை அங்கு ஐந்தடி உயரத்துக்கு கடல்நீர் நிறைந்திருந்தாலும், குழந்தை படுத்திருந்த மெத்தை அப்படியே நீரில் மிதந்து கொண்டிருந்தது. நடந்தது எதையும் அறிய முடியாமல் குழந்தை வீறிட்டு அழுதுகொண்டிருந்தது. ஒருவழியாக குழந்தையை மீட்டுவிட்டோம் என்றார்.

## சுனாமி ஏற்பட்டு 5 நாட்களின் பின்

## கட்டட இடிபாடுகளிலிருந்து இளைஞன் உயிருடன் மீட்பு

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் அடித்துச் செல்லப்பட்ட 27 வயதுடைய இளைஞர் நேற்று முன்தினம் கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இந்தோனேஷியாவின் ஆர்க்மாகாணத்தில் இடம்பெற்றது. தற்போது கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட கடல்நீர் வடிந்து வருகையில் மீட்புப் பணியாளர்கள் அங்கு மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறு மீட்பு நடவடிக்கையின் போதே குறித்த நபர் கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து மீட்கப்பட்டார்.

## சுனாமியிலிருந்து தப்பிய தாய்லாந்து ஜிப்சி இனத்தவர்!

தாய்லாந்தில் உள்ள பூர்வீக மீனவர் குடியைச் சேர்ந்தவர்கள் - சுனாமி ஏற்பட்டபோது அதில் சிக்காமல் உயிர் தப்பியுள்ளனர். இவ்வாறு தப்பியவர்கள் மார்கன் கடல் ஜிப்சிகள் என்று இந்த இனத்தவர் அழைக்கப்படுகின்றனர்.

கடலின் கதையை அறிந்தவர்கள் இவர்கள். தலைமுறை கணக்கில் இந்தக் கதை இவர்கள் மத்தியில் நிலவுகிறது.

சுனாமி ஏற்பட்டபோது சுரின் தீவிலுள்ள கிராமம் ஒன்றில் இந்த இனத்தவர் மட்டும் கோயிலை நோக்கி ஓட மற்றவர்களோ கடல் நீர் உள்வாங்கியபோது கரையில் தத்தளித்த மீனைப் பிடிக்க முயன்றனர். அப்போது அலையின் மடியில் 181 பேர் இறந்தனர் என்று 'தி நேஷன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடல் நீர் உள்வாங்கினால் அதே வேகத்தில் அந்த நீர் கரைக்கு வேகமாக மீண்டும் வரும் என்று எமது முன்னோர்கள், கதையில் கூறியுள்ளனர். அதனால் உஷாராக இருந்தோம் என அந்தக் கிராமத்தின் தலைவர் சர்மாவ் கத்தலாய் தெரிவித்ததாக அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

கடலுடன் நெருங்கிப் பழகும் அளவுக்கு இந்த ஜிப்சி இனத்தவருடன் தாய்லாந்தின் மற்ற மீனவ குடும்பங்கள் அதிகம் பழகுவதில்லை. அதனால் அவர்களது நடைமுறை தெரிய வாய்ப்பில்லை.

ஏப்ரல் - செப்ரெம்பரில் அவர்கள் கடற்கரையில் கூடாரம் கட்டிக்கொண்டு மீன்கள், இறால்களை உண்டு வாழ்க்கை நடத்துவார்கள்.

ஒவ்வொரு மே மாத்திலும் படகு விழா நடத்தி தங்களை மன்னிக்கும்படி கடல் அன்னைக்கு கோரிக்கை விடுப்பார்கள்.

தென் கரையோரப் பகுதிகளிலும் கடல்நீர் உள்வாங்கியபோது கரையில் தத்தளித்த மீன் மீது தாய்லாந்து மீனவர்கள் கவனம் காட்ட, ஜிப்சி இனத்தவர் மட்டும் மலைகளை நோக்கிச் சென்று தப்பித்துவிட்டனர் என்று அந்த பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

## அந்தமான், நிகோபரில் நேற்றும் நில நடுக்கம்!

(புதுடெல்கி)

அந்தமான், நிகோபர் தீவுகளில் நேற்றும் 3 முறை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

கிழக்கு கார் நிகோபர் பகுதியில் முதல் நில அதிர்வு அதிகாலை 3.53 மணிக்கு ஏற்பட்டது. இது றிக்சர் அளவுகோலில் 5 என பதிவாகியது. இரண்டாவது நில அதிர்வு 5 நிமிடம் கழித்து (3.58 மணிக்கு) ஏற்பட்டது. இதன் அளவு 5.5. இது நிகோபர் தீவின் மேற்குக் கடற்கரைப் பகுதியான கேமோர்ட்டாவில் ஏற்பட்டது.

மூன்றாவது நில அதிர்வு அதிகாலை 4.42 மணிக்கு கிரேட் நிகோபர் பகுதியில் உணரப்பட்டது. றிக்சரின் அளவு 5 என பதிவாகியது.

இதனால் உயிர் மற்றும் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து தகவல் எதுவும் வெளிவரவில்லை.

## திருகோணமலையில் — புலிகளின் உதவி வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்க இணக்கம்!

திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பாலசூரியவுக்கும், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்ட இந்தச் சந்திப்பில் -

வெளிமாவட்டத்திலிருந்து வரும் பொருட்கள் - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கோ அல்லது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கோ வருமாயின் அவற்றைப் பாதுகாப்பாகக் கொண்டுவருவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும், அவற்றுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதாகவும் அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கு மேஜர் ஜெனரல் பாலசூரிய உறுதியளித்தார்.

மேலும் புலிகளுக்கு வரும் வாகனங்களின் இலக்கங்களை முன்கூட்டியே அறியத் தந்தால் அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்க ஏதுவாக இருக்கும் என்றும் தெரிவித்த அவர், ஏனைய நிவாரணப் பொருட்களை எடுத்து வரும் வாகனங்கள் மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் கூறினார். (04)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐயாயிரம் வீடுகள்!

### ஐ.தே.க அமைத்துக் கொடுக்கும்

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் வீடுகளை இழந்த மக்களுக்காக 5 ஆயிரம் வீடுகளை ஐக்கியதேசியக்கட்சி அமைத்துக் கொடுக்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.கவின் பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் .

எதிர்வரும் 7 ஆம் திகதி இந்தத் திட்டம் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா பொறுப்பாக இருப்பார். குருநாகல் மற்றும் திருகோணமலை பிரதேசசபைகள் இந்தப் பணிகளை மேற்கொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## காணாமற்போன கைதிகளில் நூறு பேர் மீளத் திரும்பினர்!

(கொழும்பு)

சுனாமி அலைத் தாக்கத்தினால் மாத்தறை சிறைச்சாலையிலிருந்து காணாமற்போன கைதிகளில் 100 பேர் மீண்டும் சிறைச்சாலை அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளனர்.

இந்தக் கடற்கொந்தளிப்பு இடம்பெற்ற வேளை சிறைச்சாலைக்குள் 400 இற்கும் மேற்பட்ட கைதிகள் இருந்ததாகச் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

தற்போது சரணடைந்த 100 பேரைத் தவிர மற்றயவர்களின் நிலை குறித்து எதுவும் தெரியவில்லையெனவும், இந்த 100 பேரும் குருவிட்ட சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படைகளை மீளக் கட்டியெழுப்புவது அரசாங்கத்துக்கு மிகப் பெரிய சவால்!

## 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் இராணுவம் பாரிய அழிவைச் சந்தித்திருப்பதாகவும் - இந்த அழிவுகளிலிருந்து படைகளை மீளக் கட்டியெழுப்புவது அரசுக்கு பெரும் சவாலாக எழுந்திருப்பதாகவும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நேற்று வெளியான இந்த இதழில் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இது குறித்து மேலும் எழுதியிருப்பதாவது -

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டது முதல் எந்த இராணுவத் தயார்ப்படுத்தலும் இன்றிக் காணப்பட்ட படைத்துறை, சுனாமி அனர்த்தத்தால் ஆளணி ரீதியாகவும் ஆயுததளபாட ரீதியாகவும் பேரழிவைச் சந்தித்துள்ளது.

முக்கியமான இடங்களில் படைகள் பற்றாக்குறை, ஆயுததளபாட பற்றாக்குறை, படைகளிலிருந்து இராணுவம் தப்பியோட்டம், வெளிநாட்டுக்கு அமைதிப்படைகளென இராணுவத்தினர் அனுப்பப்பட்டமை என பல்வேறு வகையிலும் நெருக்கடிகளைச் சந்தித்துவந்த படைத்துறை, சுனாமி அனர்த்தத்தால் மேலும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

இராணுவம் இன்று எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய அழிவு யாதெனில், வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து பிரிக்கும் இராணுவத்தின் முன்னணிக் காவலரண்களில் பெரும்பாலானவை வெள்ளத்தால் முற்றாக அடித்துச் செல்லபட்டமையாகும்.

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம் தற்போது அங்கில்லை. வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட இந்த முகாமிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் கடலுடன் சங்கமமாகிவிட்டன.

அதேபோன்று கல்குடா இராணுவ முகாமும் முற்றாக அழிந்துவிட்டது. அங்கு நிலைகொண்டிருந்த 232 ஆவது படைப்பிரிவின் அதிகாரியும் அவரது படையினரும் அனர்த்தத்தில் இறந்துவிட்டனர்.

அதேபோன்று கடற்படைத் தளங்களும் பாரிய அழிவைச் சந்தித்துள்ளன. முக்கிய தளங்கள் அமைந்துள்ள பருத்தித்துறை, மணற்காடு மற்றும் காலி ஆகியவையும் திருகோணமலைக்கு வடக்கே அமைந்துள்ள உபதளங்களும் அழிவைச் சந்தித்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் அதிரடிப் படையினரும் பாரிய அழிவைச் சந்தித்துள்ளனர். கோமாரி, அறுகம்பை, அம்பாறை ஆகிய இடங்களிலுள்ள அதிரடிப்படை முகாம்கள் ஆழிப் பேரலையின் பயங்கர தாக்குதல்களைச் சந்தித்துள்ளன.

இந்த அழிவுகளிலிருந்து படைத்துறையை மீளக் கட்டியெழுப்புவது புது வருடத்தில் அரசுக்கு பாரிய சவாலாக எழுந்துள்ளது. இந்தத் திட்டத்துக்கு நிதியொதுக்குவது என்பது அரசுக்கு பாரிய சிக்கலாக இருக்கும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தால் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், சில முகாம்கள் பாதிக்கப்பட்டதால், ஆறு இராணுவ அதிகாரிகளும் 90 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர். எனினும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எந்த பலவீனமும் ஏற்படவில்லை என்று தெரிவித்தார்.

## பட்டதாரிகளுக்கான நிரந்தர வேலை வாய்ப்பு இன்று முதல் நடைமுறைக்கு!

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு நிரந்தர வேலை வழங்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதற்குத் தாமதம் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

இதேவேளை பட்டதாரிகள் குறிப்பிட்ட திகதிகளில் கடமையைப் பொறுப்பேற்கச் செல்லவேண்டும் என்று பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு விசேட ஏற்பாடு செய்யப்படும்.

பதவி ஏற்ற இடங்களில் மூன்று மாதங்களுக்கான சேவையைப் பூர்த்தி செய்த பதவிகள் வழங்கப்படும் என்று பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வவுணதீவு வாவியில் வீழ்ந்து கிராம சேவையாளர் உயிரிழப்பு

மட்டக்களப்பு - வவுணதீவுப் பாலத்தில் நேற்றுமாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த கிராம சேவையாளரும், அவரது உதவியாளரும் தவறுதலாக வாவிக்குள் வீழ்ந்து பரிதாபகரமான முறையில் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் கிராம சேவையாளரான பாலிப்போடி ஜெகநாதன் மற்றும் அவரது உதவியாளரான சோமசுந்தரம் சுதர்சன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். நேற்று மாலை இவர்கள் இருவரும் மட்டக்களப்பு நகரத்திலிருந்து கன்னங்குடாவிற்கு பயணத்தை மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் பெய்த மழையால் வவுணதீவுப் பாலத்தால் அதிகளவில் நீர் சென்றுள்ளது. இந்த நிலையில் இவர்கள் இருவரும் பாலத்தின் ஊடாக பயணம் மேற்கொண்ட வேளை பாதை தெரியாத நிலையில் தவறி வாவிக்குள் வீழ்ந்து உயிரிழந்தனர்.

## மீட்புப்பணி என்ற...

இந்த நிலையில் அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ். பொன் ஹோம் றிச்சட் என்ற விமானம் தாங்கிக் கப்பல் பசுபிக்கிலுள்ள ஒகினாவா தளத்திலிருந்து இலங்கைக்கு நகரவுள்ளது.

1500 மரைன் துருப்புக்களுடன் வரும் இந்த விமானம் தாங்கி கப்பல் தென்பகுதியிலும் திருகோணமலையிலும் உதவி நடவடிக்கைகளில் மட்டுமன்றி புனரமைப்பு நடவடிக்கைகளிலும் பங்கேற்கவுள்ளது.

முதற்கட்டமாக 200 அமெரிக்கப் படையினர் இன்று கொழும்பு வரவுள்ளனர்.

இந்த நிலையில் பாகிஸ்தான் அரசாங்கமும் உதவி, மீட்பு நடவடிக்கைகளுக்கென இரண்டு போர்க கப்பல்களை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாக அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்கள், ஹெலிகொப்டர்கள் சகிதம் இந்த நடவடிக்கையில் பங்கேற்கவுள்ளது. அத்துடன் பாகிஸ்தானிய மரைன் படையினரும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அடுத்த 24 மணிநேரத்துக்குள் சி-130 ரக விமானம் ஒன்று உதவிப் பொருட்கள், கூடாரங்கள், மருத்துவப் பொருட்கள், உணவுப் பொருட்களுடன் இலங்கைக்குச் செல்லும் என பாகிஸ்தான் அரசு அறிவித்திருக்கிறது.

சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி இந்த நாடுகள் தமது படைபலத்தை இலங்கை மற்றும் அதன் கடலோரப் பகுதிகளில் பெருக்குவது குறித்து பல்வேறு தரப்பினரும் சந்தேகம் கிளப்பியுள்ளனர்.

உதவி, நிவாரணப் பணிகள் என்ற பெயரில் கொண்டுவரப்படும் வெளிநாட்டுப் படையினர் எவ்வளவு காலத்துக்கு இங்கு தங்குவர் என்பது வரையறுக்கப்படாமல் இருப்பது ஆபத்தான விடயமாகலாம் எனறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

### நலன்புரி...

வர் கதிரை மேசைகள் எரிந்து போயின. இந்தச் சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்த யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் பாதிக்கப்பட்ட குடத்தனை மக்களுடனும், படையினருடனும் கலந்துரையாடினர்.

சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நலன்புரி நிலையத்தில் இருந்த மக்களிடம் விசாரித்தனர். பின்னர் இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை மக்கள் வேளாங்கன்னி மாதா கோவிலில் தங்கப்போவதாக தெரிவித்தனர்.

## அமெரிக்கப் படையின் வருகைக்கு...

யும் உள்ளடக்கியிருக்கும் அமெரிக்க வல்லரசின் கடற்படைத் துருப்புக்களையும், கப்பல்களையும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைத் துறைமுகம் உட்பட இலங்கைத் தீவின் துறைமுகங்களில் நிலை கொள்ளவைப்பதன் மூலம் இந்த நாட்டில் தேசியக் கேள்வியாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சினையில் தமிழினத்தின் அரசியல் அபிலாஷைகளை ஓர் எல்லைக்குள் மட்டுப்படுத்தி கட்டுப்படுத்தும் கபட நோக்குடனேயே அமெரிக்க கடற்படைத் துருப்புக்கள் இங்கே அழைக்கப்பட்டிருக்கின்றன.

இயற்கையின் சீற்றத்தால் ஈடு செய்யமுடியாத இழப்புக்களையும் வார்த்தைகளால் விபரிக்கமுடியாத துன்ப துயரங்களையும் சுமந்து கொண்டிருக்கும் தமிழ்மக்களின் இன்றைய வேதனைச் சூழ்நிலையில் விரைந்து கைகொடுக்கத் தவறிய ஜனாதிபதியும் அவரின் அரசும் வலியக் கிடைத்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தைப் தகுந்தமுறையில் தமது இனவாத அரசியல் குறிக்கோளுக்கு அனுசரணையாக பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

இறைமை கொண்ட ஈராக் நாட்டை அடாவடித்தனமாக ஆக்கிரமித்து அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்துவரும் அதேநேரத்தில் இயற்கையால் வஞ்சிக்கப்பட்டும், வதைக்கப்புட்டும் நிற்கும் இலங்கைத் தீவு மக்களின் துன்ப துயரங்களைத் துடைத்தெறிய அமெரிக்க வல்லரசு துடிப்புடன் விரைந்து வருவது அப்படியொன்றும் மனிதாபிமான உணர்வால் உந்தப்பட்டு அல்ல என்ற உண்மையை எமது மக்கள் நன்கறிவார்கள்.

எந்தவொரு பாரிய நெருக்கடி நிலைமையிலும் தமது அடிப்படை அரசியல் நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்க உறுதியுடன் மறுத்து வந்திருக்கும் எமது மக்கள், அரசியல் அபிலாஷைகளை அடக்கியொடுக்கும் திட்டத்துடன் அமெரிக்க ஆதிபத்தியத்தின் துருப்புக்கள் எமது மண்ணிலும் கடற்பரப்பிலும் நிலை கொள்வதை அனுமதிக்க மாட்டார்கள்.

அதேபோல் அமெரிக்க வல்லரசின் அதிகார வெறிக்கும் சதிகார மதிக்கும் எதிராகக் குரல்கொடுத்து வந்திருக்கும் தென்னிலங்கையின் இடதுசாரி - முற்போக்கு 'அரசியல் சக்திகளும் புத்திஜீவிகளும் சிந்தனையாளர்களும் இலங்கைத்தீவின் கடற்பரப்பிலும் நிலப்பரப்பிலும் அமெரிக்கக் கப்பல்கள் நிலை கொள்வதை சகித்துக்கொள்ளமாட்டார்கள்.

இந்த நிலையில் அமெரிக்க வல்லரசின் படைகள் இலங்கைத் தீவில் நிலைகொள்வதை எதிர்த்து தென்னிலங்கையின் அரசியற் சக்திகளையும் உள்ளடக்கி, பரந்துபட்ட எதிர்ப்பு இயக்கம் ஒன்றை இன்றைய இக்கட்டான நிலைமையிலும் முன்னெடுக்கவேண்டிய கட்டாயம் தமிழ்த் தேசிய சக்திகள் அனைத்துக்கும் ஒரு சவாலாகவே உள்ளது.

இந்தச் சவால் சந்திக்கப்பட்டே ஆகவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இலங்கை...

அனைத்தையும் வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது. இவ் அனர்த்தத்தால் இலங்கை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு பாரிய அளவிலான மனிதாபிமான தேவைகள் ஏற்பட்டுள்ளன.

இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாங்கள் சர்வதேச சமூகங்களுடன் இணைந்து செயற்படவுள்ளோம்.

எம்மிடம் பேரழிவு நிவாரணக் குழுக்கள் உண்டு. உலகில் உள்ள பல்வேறு நாடுகளிலும் எமது பேரழிவு நிவாரணக்குழுக்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.எமது மீட்புக்குழுவினர் உடனடியாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இனங்காணப்பட்ட அவசர தேவைகளுக்காக நாம் முதற்கட்ட நிதியை ஒதுக்கியுள்ளோம். மேலதிக தேவைகளுக்கான நிதியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. நாம் தேவையான நேரத்தில் அந்தநிதியினை வழங்குவோம்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மீள்கட்டுமான, புனர்நிர்மாண, புனரமைப்பு வர்த்தக மற்றும் பொருளாதார தேவைகளுக்காக இந்த நிதியினை அடுத்த கட்டமாக வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

D.M.I
A/L - 2007
(கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம் - ஜனவரி 8 காலை 8 மணிக்கு

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு | – டி. சாம் | தமிழ் | – மீரா |
| வணிகக்கல்வி | – பசில் | இந்துநாகரிகம் | – ஜோதீஸ்வரன் |
| பொருளியல் | – இராஜேஸ்வரன் | அளவையியல் | – மோகன் |
| பொதுவினா / புள்ளிவிபரவியல் | – தவமோகன் | கிறிஸ்தவம் | – மல்லிகா |
| | | புவியியல் | – இக்னேசியஸ் |
| ஆங்கிலம் | – சுதர்சன் | நாடகமும் அரங்கியலும் | – சந்திரன் |

(C/3504)

## மரண அறிவித்தல்



### சோமசேகரம் நகுலாம்பிகை

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 65, அம்மன் வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **சோமசேகரம் நகுலாம்பிகை 02.01.2005** அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சோமசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், சோமாவதி (லண்டன்), சோமலதா, சோமரஞ்சிதன் (சுவிஸ்), சோமரசி (பிரான்ஸ்), சோமரஞ்சினி, சோமஜெகன் (லண்டன்), சோமகௌசி ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியபாலா (லண்டன்), தர்மசேனா (யாழ். பல்கலைக்கழகம்), சிறிதேவி (சுவிஸ்), இந்திரகுமார் (பிரான்ஸ்), அருமைலிங்கம் (தபாற்கந்தோர் - மீசாலை) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
அ.சோமசேகரம் *(கணவர்)*

(1018)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.